KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று

ளா நிலயம்.

VS. No: 35. 8.9.1932.

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஞ செப்டம்பர் மீ 8உ [No. 35

12 DEC

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 681
2. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 683
3. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 7-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 685
4. தமிழ்ப்பாடம் நளவெண்பா - கலிதொடர்காண்டம் 686
5. புறவொடு புலம்பல் K. நடேசகவுண்டர் 689
6. ஷெல்லி—கடல் P. C. ஜயவேலு 690
7. பொதிகைநிகண்டு (இடப்பெயர்த் தொகுதி) 692
8. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 4. களம் 3.) ஷேக்ஸ்பியர் நாடகம் 693
9. முருகன் போற்றி மாலை நவாலி க. சோமசுந்தரம் பிள்ளை 695
10. மலர்வனம்—மதுகரம் 696
11. வர்த்தமானம் 699

கலாநிலயம்

விருப்பமும் கருவியும் 10.

தீண்டாமை பெண்ணுரிமை என, திரு.வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களால் வற்புறுத்தப் பெற்ற இரண்டினுள், தீண்டாமையைப் பற்றிய உண்மையைச் சென்றவாரம் காட்டினோம். பெண்ணுரிமையைப் பற்றிய உண்மை எவ்வகைத்து என்பதையும் இனிச் சிறிது காட்டவேண்டும். இதற்காக,1928 வது ஆண்டில் இவ்விதழ்களில் வந்துள ஓர் தலையங்கத்தை ஈண்டுப் பெயர்த் தெழுதுகின்றோம். திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களது கூற்றினோடு இதனை ஒப்புநோக்கி, பன்மையால் நேர்கின்ற வஞ்சனையை நன்றாகப் பார்த்துக்கொள்ளலாம்:—

“சொற்றொடர்களால் கட்டுண்ணும்தற்கால விபரீதங்களில் மாதர் இயக்கம் (Women's movement) என்பதுவு மொன்று. இந்நாள் பிரசங்க மேடைகளிலும் பத்திரிகைகளின் பக்கங்களிலும் மற்று யாவர்தம் வாயிலும் காற்றாய் உலவுகின்ற இச் சொல்லேயன்றி வேறோர் உருவம் இல்லாத ‘மாதர் சுதந்தரம்’ என்னும் ஓர் விக்கிரகத்தைப் பெண்மக்கள் சிலர் தமக்கிடையே நிறுத்திவைத்துச் சங்கங்களாகக் கூடி, அவர்களோடு அனுதாபம்கொண்ட ஆடவர்களையும் துணைகொண்டு தமக்கே உரியதெனச் சில சுதந்தரங்கள் இருந்தனவென்றும், அவைகளைச் சுயநய சித்தம் வாய்ந்த ஆண்மக்களின் கொடுமையால் தாம் இழந்துவிட்டனரென்றும் குறைகூறி, இழந்தவச் சுதந்தரங்களை மீண்டும் பெறுமாறு பிரார்த்திக்கின்றனர்: உண்மையே நோக்கின், தமக்கே சிறப்பாய் உரியதென இம்மாதர் கேட்பதுதான் யாதோ, அத்தெய்வந்தான் அளித்தற்குரிய வரம் யாதோ—அறிகிலேம்.

“மாதரின் உரிமைபற்றி நடைபெறும் இவ்வியக்கம் நல்லதே என இந்நாட்டுப் பெரியோர் பலரும் கொள்கின்றனர். இதன் மூலமாக இந்தியாவுக்கு நலம் பல பிறக்கப் போகின்றதென்பது அவர் எண்ணம். இந்தியாவிற்குப் பலவித நன்மைகள் பற்பல திசைகளிலிருந்து வருவதற்கு இருப்பன போலவே இம்மாதரியக்கத் திசையிற் காண்பதும் பேய்த்தேர் செய்தியோ, அல்லது நிலையாய நலம்பயப்பதற்குற்றமார்க்கம் இதுவுமொன்றோ, என்பது எம்மால் சொல்லக்கூடியதொன்றன்று. இஃது எதுவாயினுமாகுக.

“சில தினங்களுக்குமுன் லாலா லஜபதிராய் அவர்கள் “இந்தியாவில் மாதரைப் பற்றிய விசாரம்” என்னும் ஓர் பிரசங்கம் நிகழ்த்தினர். எப்பொருட்கும் மெய்ப்பொருள் காணும் அவாவுடையார் அப்பெரியவர் செய்த பிரசங்கத்தைக் கேட்டிருப்பின் அது விஷய ஆராய்ச்சி செய்வதற்குப் பேருதவியாகும். கேளாதார், பத்திரிகைகளில் வெளிவந்துள்ள அவர் பிரசங்கத்தை ஊன்றி ஓதுமாறு விழைகின்றோம். உலகப் போக்கினை உற்று ஆய்ந்தவரும், இந்துமத மென்பது வாழ்க்கையின் வழித்துணையே யன்றித் தத்துவக் கொள்கைக ளல்லவெனும் சீரிய உண்மையைத் தெளிந்தவரும், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரும் ஆயினவர் அப்பெரியார். அவர் மாதரைப் பற்றிப் பிரத்தியேகமான விசாரம் ஒன்றும் பெரிது கொண்டதாகக் காணவில்லை. “உங்கள் மாதர் முற்றிலும் விடுதலையடையட்டும். அவர்களை நீங்கள் கட்டிவைத்திருக்கின்ற கட்டுக்களை அவிழ்த்து விட்டுவிடுங்கள்”, என்று அவர் ஆடவர்களை நோக்கி இடித்துரைத்தா

ரேனும், இதுவும் இதைப்போன்ற ஒன்றிரண்டு வாசகங்களும், பிரசங்கத்தின் தலைப்பிற்கிணங்க வழக்கத்திற்கு ஒட்டிச் சொல்லித்தீரவேண்டுமே எனும் பான்மையில் வாயிலும் படாமல் அரைமனதோடு வந்திருக்கின்றனவேயன்றி, மற்ற வெல்லாம் மாந்தருள் இருபாலார்க்கும் பொருந்துவனவாகிய பொதுதர்மங்களையே நிலைநாட்டி வற்புறுத்துகின்றன. "எங்களை அறியாமையில் ஆழ்த்திவைத்துச் சுதந்தரக் கரையேறவொட்டாது தடுக்கின்ற ஆடவர்காள், இதுவுமக் கடுக்குமோ!" என முறையிடும் மடவார்க்கு லாலாஜி பகரும் உத்தரம் வேதவாக்கெனக் கொள்ளத்தக்கது. "மாதர்காள், நாங்களுமே அடிமைகளென்பதை அறிவீரோ!" என எடுத்துக் காட்டியபின் தம் முரிமை என மாதர் தனியாகக் கேட்பதற்கு யாதுளது?

"வாய்மையே நோக்கின் தமக்கே உரியதென யாது கேட்கின்றனர் மாதர்? சுற்றிச் சுற்றி வந்தால் எல்லாம் சட்டசபைகளில் ஒட்டெடுக்கின்ற செய்தியிலேயே வந்து முடியும். இதுவோ உரிமை! கடமையன்றோ வது! அக்கடமையை ஆண்மக்களே பெண் மக்களுக்கும் பாதகமின்றிச் செலுத்தமாட்டார் என்னும் சந்தேகம் உளதாயின், அது மிகவும் குறுகிய நோக்கமே யாகும். ஆடவர்கள் சரியாகச் செய்யாதவிடத்துப் பெண்கள் தாந்தாம் சரிவரச்செய்து முடிப்பர் எனும் நிச்சயம் எங்கிருந்து வருகின்றது. எந்த விதத்தில் ஆடவர் பெண்களை அடக்கிவைத்திருக்கிறார்கள். ஒரு தெருவில் புருஷன் மனைவியைப் பாடுபடுத்துகின்ற வீடு பத்திருந்தால், மனைவியும் புருஷனை உயிரோடு வதைத்துண்ணுகின்ற வீடுகளும் பத்து வீடு அடுத்தடுத்து இல்லாமற் போகவில்லையே. பெண்களுக்குக் கல்வியைப் புருஷன் கற்பிக்கமாட்டேன் என்கின்றதாக நிலவும் ஒரு அபவாதம்; புருஷர் எல்லாரும் கற்றவரா! கலாசாலைக்குச் செல்பவரெல்லாம் கல்வியா கற்கின்றார் என்று எண்ணுகின்றீர். வயிற்றை நிரப்புவதற்கு ஏதோ வாயசைக்கவே பழகிவருகின்றார். இக்கல்வியைப் பெண்கள் கற்பதிலும் கல்லாமை மிகச் சிறந்தது. மெய்யாய கல்வியைக் கற்றவன் எவனும் தனது அகத்தமர்ந்த மாதருக்குப் புறத்தொரு தூண்டுதல் இன்றியேயும் உய்யவரும் உயிர்நூல்கள் ஓதாமல் இரான். மனைவியிருக்க மனைவியும் ஒருத்திக்குப்பின் ஒருத்தியும் விவாகம் செய்துகொள்ளும் உரிமை புருஷனிற்கிருக்க, இருந்தாலும் செத்தாலும் ஒருவனோடு எம்மணவுரிமை முடிவானேன், என்று மாதர் சிலர் கேட்பது பரிதாபமே. சாத்திரங்களைக் கூறியும் மறுத்தும் இதன் நிமித்தம் வாதாடி விவகரிப்பதால் இருதிறத்திலும் பயனில்லை. மனையறம் நடத்துதற்கியன்ற மனப்பான்மை இல்லாதகாலத்து விவாகக் கடமையை உரிமை என்று மயங்குகின்ற செய்தி இது. இந்தியா தவிர மற்ற நாடுகளில் பெரும்பான்மை இவ்விதத் தடைகள் ஒன்றுமில்லையே. அதனால் அந்நாட்டு மாதர் என்ன பதவி அடைந்துவிட்டனர். என்ன சுகம் பெற்றனர்! 'நான் செய்து கொள்ளக்கூடிய கலியாணத்திற்குக் கணக்கில்லை, அதனால் நான் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கின்றேன்" என்று தன் முதுகைத் தானே தட்டிக் கொண்டு சந்தோஷப்படுகின்றவர் யாராவது இருப்பாராயின் அன்னாரைக் காணப் பெரிதும் விரும்புகின்றோம்.

"ஆஸ்தியைப்பற்றிய சுதந்திரம் மற்றொன்று. இவ்வகையில் புருஷன் பெற்ற பேறு யாவதென மதித்துப் பெண்களுக்கும் அது வேண்டும் என்று கேட்கின்றனரோ தெரியவில்லையே. 'களப்பிற்கும்' கடற்கரைக்கும் தடையின்றிப் போவதை ஒரு உரிமை என்று வைத்துப் பேசுவதுபோலாம் இது.

"ஆதலால், பெண்களுக்கென்று கேட்கின்ற இவ்வுரிமைகளை எல்லாம் வரிசையாய்ப் பார்த்தால், புருஷன் செய்வதையெல்லாம் அவர்களும் செய்யக்கூடியவர்களா யிருக்கவேண்டும் என்னும் ஒரு உட்கருத்தே எஞ்சி நிற்கின்றது. செய்வனவெல்லாம் செய்து புருஷர் என்ன சாதித்தனர். அன்போடும் அறத்தோடும் இயன்ற வாழ்க்கையை எய்த யாவருக்கும் உரிமையுண்டு. அதை யாவராலும் கவர இயலாது. அன்பும் அறமும் துறந்து அடிமைகளாய்க் கிடக்கின்ற மாந்தர் தாம் வாழ்வின் உரிமையை இழந்தவராவர். நும்போல் நாங்களும் வாழ்வைச் சிதைத்துக்கொள்கின்ற உரிமை வேண்டுமெனக் கேட்பாருமுளரோ. அவ்வண்ணங் கேட்கவைப்பாரும் தீமையே யல்லாது நலம்புரிவார் ஆகார்.

"ஆடவர் பெண்டிரென்று மக்களைப் பிரித்துப் பார்க்கவேண்டிய நியதியே யில்லை. லாலாஜி கூறியபடி புருடர் புருடர், பெண்கள் பெண்கள், அவ்வளவே. அவர்கள் அடிமைகளாயின் இவர்களும் அடிமைகளே. அடிமைகளுக்குள் ஏற்றத்தாழ்வில்லை. இவ்வுரிமை அவ்வுரிமை என்னும் சில சொற்றொடர்களுக்கு அடிமையாயிருக்கின்ற காலம் இக்காலம். உண்மையற்றன யாவும் உயிரற்றன. இச்சொற்றொடர்களில் உண்மையில்லை. ஆகையால் அவை உய்க்கும் இயக்கங்களில் உயிருமில்லை. ஆண்பெண் இருபாலார்க்கும், எல்லாச் சாதியாருக்கும் எவ்வித மதத்தினர்களுக்கும் எங்கெங்குவைகின்ற நாட்டினர்க்கும், யாவருக்கும், ஒருங்கே உறுதி பயப்பன யாவையோ அவைதாம், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த தெதுவொன்று விளங்குகின்றதோ அத் தனிப்பெரும் பொருளின் திருவுளத்திற்கு இயன்றதா யமையும். எம்முரிமை இதுஇது வென ஆராயும் மனதை மறப்போமாயின் அருட்பெருங் கடவுளின் ஆட்சிக்கு அயலாகமாட்டோம். அவ்வருளாட்சிக்கு அயலாயிருப்பார் யாவரும் அடிமைகளே யென்பதை அறியீரோ. அடிமைகள் சென்று அடிமைகளிடத்தில் உரிமைக்கு மன்றாட வேண்டவே வேண்டா!"

இஃதிவ்வாறாக, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், கலப்புமணத்தைக் காதல் மணமாக்கி அக் காதல் மணத்தைக் களவு மணமாக்கிப் பெண்ணடிமையோடு தீண்டாமையென்னும் நச்சுக்குழவிகளைத் தீர்க்கும் வகை நாடுகின்ற தர்க்கத்தின் தொடர்ச்சி எவ்வாறமையுமெனத் தேர்தற்கு எம்மால் இயலவில்லை. மேல் நாடுகளில், பிறப்புச்சாதியு மில்லை, களவுமணங்களும் கணக்கின்றி நிகழ்கின்றன. என்ன வாழ்கின்றனர் அவர்! "நாங்களெல்லோரும் கொடும்பாவிகள், எங்களைத் தீண்டாதீர்" என்று ஆங்கில கவி மாத்யூ ஆர்னல்ட், "Scholar Gipsy" என்னும் பாட்டில் புலம்புகின்றார். இந்தியாவில், பெண்கள் புருடர்களுக்கு அடிமைகளாயிருக்கின்றார்களென்பதன் பொருள் விளங்காமை ஊன்றி நோக்குவோர்க்கு எளிதிற் புலப்படும். இது எவ்வாறாயினும், புருடர்களுக்குத் தானே அடிமைகளாயிருப்பதாகச் சிலர் காத்தழும்பேறச் சொல்வதற்கு இலக்காயிருக்கின்றனர் இந்நாட்டு மாதர். இவர்தம் ஆங்கில சகோதரிகளோ, வந்துப் புகைச் சுருட்டிற்கு அடிமைகளாயிருக்...

199149

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[664-வது பக்கத் தொடர்ச்சி]

(15) சத்தம்:-சத்தம் செவிப்புலனாற் கவரப்படுவது. இது ஆகாயத்தினுடைய விசேட குணம். காற்றின் அலையால் சப்தம் பற்பல திக்குக்களிலும் பரவுமென்று தற்கால இயற்கைத் தத்துவநூல் (Physics) கூறுவதை, நமது முன்னோர் தர்க்கநூலில் வீசிதரங்க நியாயமென நிரூபிப்பார். இத்துடனும், அது பல திக்கில் பரவுவதைக் கதம்பமுகுள நியாயமென்பர்; அதாவது, தாமரைமொக்கின் நடுவினின்று எல்லாத் திக்குக்களையும் நோக்கி இதழ்கள் எழுகின்றனவே, அங்ஙனமே எவ்விடத்தில் முதற்சப்த முண்டாகின்றதோ, அதனின்றும் கிழக்கு முதலிய பத்துத் திக்குக்களினும் பத்துச் சப்தத்தரங்கங்கள் செல்லுமென்பதாம். மேல்நாட்டு இயற்கைத்தத்துவநூலார் சத்தத்திற்கு வாயுவே முக்கிய ஆதாரமென்று கூறுவார் கம்பியற்ற மின்சாரத்தத்துவ விருத்தியால், இப்போது ஆகாயத்திலுண்டாகும் ஒருவகைத் தரங்கத்தால் சப்தம் பரவுமென்பது சித்தாந்தமாயிருக்கின்றது. ஆகாயத்தின் தன்மையாயிருப்பின் ஒரு உலகத்திலுள்ளவன் மற்றொரு உலகவாசியுடன் பேசக்கூடுமென்பது திண்ணம் *. இதை இன்னும் மேல்நாட்டு அறிவியல்நூல் வெளியிடாமையால் நம்மனோர்க்கு விளங்காமலு மிருக்கலாம். ஆயினும், நம் முன்னோர் தம் தர்க்கநூற் கொள்கையைச் சம்பந்தரும்,

வேதம்ம லிந்தவொ லிவிழ வின்னொலி வீணையொலி
கீதம்ம லிந்துடனேகிள ரத்திகழ் பௌவமறை [யான்
ஓதம்ம லிந்துயர் வான்முக டேறவொண் மால்வரை
பேதையொ டும்மிருந் தான்பிர மாபுரம் பேணுமினே.

திருப்பிரமபுரம் - பண் - பஞ்சமம் 7.

(16) புத்தி:- பொருள்விளக்கம்செய்யுந் தன்மை; இது உயிருள்ள பொருள்களிடம் காணக்கூடியது:—

புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயின் நூலால்
பொதுப்பந்த ரதுவிழைத்துச் சருகால் மேய்ந்த
சித்தியினா லரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலான் மிக்க
வித்தகத்தால் வெள்ளானை வெள்ளா வன்பு
விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப்
பத்தர்களுக் கின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.

திருப்பாசூர் - திருத்தாண்டகம் 6.

பதார்த்தங்களின் சொரூபத்தை நிச்சயஞ் செய்வதெதுவோ அதுதான் புத்தி. இது அந்தக்கரணங்களில் ஒன்று. ஒரு கடத்தை யான் அறிகின்றேன் என்னும் ஞானத்தாற் குறிக்கப்படும் அறிவின் தன்மை தர்க்கத்தில் புத்தி யெனப்படும். அறிவு சாமானியமாயிருப்பதால்* இயற்கையில் பிறழ்வதுமுண்டு. ஆகையால் கல்வி கேள்வி முதலியவற்றால் கூர்மைபெற்ற புத்தியே முற்றும் பயன்படக்கூடியதாகும். நம் அறிவை விளக்கக்கூடிய மேலான அறிவு வேறு ஒன்று உளதாதலால், அதைப் பற்றுக்கோடாய்க் கொண்ட புத்தி தான் பொருளின் உண்மைநிலையை யறியுமென்பர்:—

புந்திக் குவிளக் காய புராணனைச்
சந்திக் கண்ணட மாடுஞ்ச தானனை
அந்தி வண்ணனை யாரழல் மூர்த்தியை
வந்தெ னுள்ளங்கொண் டானை மறப்பனே.

மறக்கிற்பனே என்னும் திருக்குறுந்தொகை 2.

(17) சுகம்:—அதாவது இன்பம்

(18) துக்கம்:- அதாவது துன்பம்.

இவ்விரண்டும் பிறவியில் அலையலையாய் மாறி ஆன்மகோடிகளை அடிப்பன-இவ்விரண்டும் பேரின்ப நிலைக்குச் சிறிதும் பயன்படா. இவை பாசப் பொருள்களின் குணங்கள்; பரமன் அருளால் மாய்வனவாம்.

இன்ப மும்பிறப் பும்மிறப் பின்னொடு
துன்ப மும்முட னேவைத்த சோதியான்
அன்ப னேயர னேயென் றரற்றுவார்க்
கின்ப னாகு மெறும்பியூ ரீசனே.

திருவெறும்பியூர் - திருக்குறுந்தொகை 9.

துன்ப மில்லை துயரில்லை யாமினி
நம்ப னாகிய நன்மணி கண்டனார்
என்பொ னாருறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி யேத்தி யிருப்பதே.

திருவேட்களம் - திருக்குறுந்தொகை 5.

துன்ப மின்றித் துயரின்றி யென்றுநீர்
இன்பம் வேண்டி லிராப்பக லேத்துமின்
என்பொ னீச னிறைவனென் றுள்குவார்க்
கன்ப னாயிடு மானைக்கா வண்ணலே.

திருவானைக்கா—திருக்குறுந்தொகை 3.

துன்பெ லாமற நீங்கிச் சுபத்தராய்
என்பெ லாநெக் கிராப்பக லேத்திநின்
றின்ப ராய்நினைந் தென்று மிடையறா
அன்ப ராமவர்க் கன்பரா ரூரரே.

திருவாரூர் - திருக்குறுந்தொகை 4.

(19) இராகம்:- இது தர்க்கத்தில், வலிய இச்சையென்னும் விஸ்தீரணப் பொருள்கொள்ளும். ஆயினும் ஞானசாதனத்தா லுண்டாகும் இச்சையின்பாற்படாது. இதன் வியாபகம் எழுவகைத்து. அவையாவன :—காமம் - புணர்ச்சியில் † விருப்பம். இதில் மோகமும் அடங்கும்.

காமத்து ளெழுந்தி நின்று கண்டரா லொறுப்புண்டே
சாமத்து வேத மாகி நின்றதோர் சயம்பு தன்னை

* நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியு முடியு மிகலி போற்றி
யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா வென்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய வுருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஸ்ரீ கைலாயம் - போற்றித் திருத்தாண்டகம் 9.

* விட்டிட் டானை மெய்ஞ்ஞானத்து மெய்ப்பொருள்
கட்டிட் டானைக் கனங்குழை பாலன்பு
பட்டிட் டானைப் பகைத்தவர் முப்புரம்
சுட்டிட் டானைக் கண்டீர்தொழற் பாலதே

தொழற்பாலதே என்னும் திருக்குறுந்தொகை 10.

ஏமத்து மிடையி ராவும் ஏகாந்த மிபம்பு வார்க்கு
ஓமத்து ளொளிய தாகு மொற்றியூ ருடைய கோவே.

திருவொற்றியூர் - திருநேரிசை 4.

(ii) மற்சாரம்—அதாவது தன் பயனை விசாரியாமலே பிறன் விரும்பியதைத் $ தடுக்க விரும்புதல். இதை இடக்கு ஓம்பல் என்பது முண்டு.

பழிவழி யோடிய பாவிப்
பறிதலைக் குண்டர்தங்கள்
மொழிவழி யோடி முடிவேன்
முடியாமைக் காத்துக்கொண்டாய்
கழிவழி யோத முலவு
கடல்நாகைக் காரோணவென்
வழிவழி யாளாகும் வண்ண
மருளெங்கள் வானவனே.

திருநாகைக்காரோணம் - திருவிருத்தம் 4.

(iii) தருமவிரோத மில்லாத பொருளவா:—

தாயத் தார்தமர் நல்நிதி யென்னுமிம்
மாயத் தேகிடந் திட்டு மயங்கிடேல்
காயத் தேயுளன் கானூர் முளையினை
வாயத் தால்வணங் கீர்வினை மாயவே.

திருக்கானூர் - திருக்குறுந்தொகை 3.

(iv) திருஷ்ணை:-அதாவது என்னுடைய பொருளாகிய இது என்றும் கெடலாகாதென்னும் விருப்பம். இதனால் எவ்விஷயத்தில் எவ்வளவு பொருள் செலவிடல் தகுதிபோ அவ்விஷயத்தில் அவ்வளவு பொருளைச் செலவழியாது காக்கின்ற கார்ப்பண்யமும், திருஷ்ணையின் ஒரு பகுதியாம்.

கட்டமே வினைகளான காத்திவை நோக்கி யாளாய்
ஒட்டவேயொட்டிநாளு முன்னையுள் வைக்கமாட்டேன்
பட்டவான் தலைகை யேந்திப் பலிதிரிந் தூர்கடோறும்
அட்டமா வுருவினானே யாவடு துறையு ளானே.

(v) உலோபம்:-தர்மவிரோதமாகப் பிறர்பொருளை விரும்பல்.

பழிவழியோடிய பாவிப் பறிதலைக் குண்டர்தங்கள்
மொழிவழியோடி முடிவேன் முடியாமைக் காத்துக் [கொண்டாய்
கழிவழி யோத முலவுங் கடல்நாகைக் காரோணவென்
வழிவழி யாளாகும் வண்ண மருளெங்கள் வானவனே

திருநாகைக் காரோணம்-திருவிருத்தம் 4.

கழியருகு பள்ளியிட மாகவடு மீன்கள்கவர் வாரும்
வழியருகு சாரவெயில் நின்றடிசி லுள்கிவரு வாரும்
பழியருகி னுமொழிகபான்மை நின்றதொழு தேத்தும்
அழியருவி தோய்ந்தபெரு மானுறைவ தவளிவணல் [லூரே

—சம்பந்தர்

(vi) மாயம்:-அதாவது பிறரை வஞ்சிக்க * விரும்புதல்:—

மாயத்தை யறிய மாட்டேன்
மையல்கொண் மனத்த னாகிப்
பேயொத்துக் கூகை யானேன்
பிஞ்ஞகா பிறப்பொன் றில்லீ
நேயத்தால் நினைய மாட்டேன்
நீதனே நீச னேன்நான்
காயத்தைக் கழிக்க மாட்டேன்
கடவூர்வீ ரட்ட னீரே.

திருக்கடவூர் - திருநேரிசை 7.

(vii) இடம்பம்:-அகத்தே தர்மமுடைமை யில்லாமல் புறத்தே அஃதுடையதுபோல் தனது மேன்மையைப் பிறருக்கு அறிவிக்க விரும்பும் குணம்—

கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே.

பாவநாசத் திருக்குறுந்தொகை 7.

இவ்வெழுவகையும் தர்க்கத்தில் இராகமென்று எடுக்கப்பட்டன. இவை "திருகு சிந்தை"யால் உண்டாவன. நல்ல எண்ணங்கள் நிறைந்த மனமுடையோருக்கு இத்தோஷங்கள் நேராவென்பது மேலோர் துணிபு—

திருகு சிந்தையைத் தீர்த்துச்செம் மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்
துருகி நைபவர்க் கூனமொன் றின்றியே
அருகு நின்றிடு மானைக்கா வண்ணலே.

திருவானைக்கா - திருக்குறுந்தொகை 2.

இத்தகைய சிந்தையால் மனிதர் உலகவாழ்க்கையில் வருந்துவதைப் பற்பல விதங்களாய் அப்பர், திருநெய்த்தானம் திருத்தாண்டகப் பதிக முற்றும் காட்டுகின்றார் (சைவ சித்தாந்த மஹா சமாஜப் பதிப்பு. அப்பர் தேவாரம் பக்கம் 393—395 வரையில் நோக்குக). அவற்றுள் ஒன்று:—

பரவிப் பலபலவுந் தேடி யோடிப்
பாழாங் குரம்பையிடைக் கிடந்து வாளா
குரவிக் குடிவாழ்க்கை வாழ வெண்ணிக்
குலைகை தவிர்நெஞ்சே கூறக் கேள்நீ
இரவிக் குலமுதலா வானோர் கூடி
யெண்ணிறந்த கோடி யமர ராயம்
நிரவிக் கரியவன் நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 3.

---

† பிணமுடை யுடலுக் காகப்
பித்தராய்த் திரிந்து நீங்கள்
புணர்வெனும் போகம் வேண்டா
போக்கலாம் பொய்யை நீக்க
நிணமுடை நெஞ்சி னுள்ளால்
நினைக்குமா நினைக்கின் றார்க்கு
உணர்வினோ டிருப்பர் போலு
மொற்றியூ ருடைய கோவே.

திருவொற்றியூர் - திருநேரிசை 7.

$ பொக்கம் பேசிப் பொழுது கழியாதே
துக்கம் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வித் தகர்த்த கழல்வண்ணன்
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே

திருநல்லம் - திருக்குறுந்தொகை 2.

* வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா வண்ணலே.

திருவானைக்கா - திருக்குறுந்தொகை 5.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[666-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 7-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

பயிலுஞ் சுடரொளி மூர்த்தியைப்
பங்கயக் கண்ணனைப்
பயில வினியநம் பாற்கடற்
சேர்ந்த பரமனைப்
பயிலுந் திருவுடை யாரெவ
ரேனு மவர்கண்டீர்
பயிலும் பிறப்பிடை தோறெம்மை
யாளும் பரமரே.

அவதாரிகை:—ஆழ்வார் முன் மூன்றும் தசகத்தில், "ஒழிவில் காலமெல்லாம் பகவானுக்கு அடிமை செய்யவேண்டும்" என்று கோலினவர், அவ்விருப்பத்தின் படியே இதுகாறும் ஒருவாறு தாமே வாசாகைங்கரியமாய்த் துதிசெய்தும் பரோபதேசம் செய்தும் வந்தார். அது இப்பொழுது முடிந்துவிட்ட பின்னர், கைங்கரியங்கள் தாம் செய்யப்புகாமல், பகவானுக்கு அடிமையாயிருப்பது பற்றி அவனிடத்தில் அன்புவாய்ந்த பக்தர்களுக்கும் தாஸராகத் தாம் ஆகின்றேனென்று இந்தத் தசகத்தில் கூறுவது எப்படிப்பொருந்தும் என்றால்—இத்தசகத்தில், எம்பெருமான் தன் திருமேனி வடிவழகுக்குத் தோற்று அடிமை செய்யும் ஸ்ரீவைணவர்களை எல்லாரிலும் சீரியராக்குவான் ஆகையாலே அவ்வைணவதாஸர்கள் எனக்கு ஸ்வாமிகள் ஆவார்களென்று கொண்டு எம்பெருமான் "ஆதிதாஸியாவஹ விக்கிரஹன்" (அதாவது தன் னடியாருக்கு ஆட்படுத்தும் குணமுடையவன்) என்று, நிரூபிக்கையாலே இப்பத்துப் பொருந்துமென்பது திருவுள்ளம்.

தாத்பரியம்:—எம்பெருமானைப் பிரீதியோடே அநுபவிக்கும் இனிமையான தாஸியாஸ ஸம்பத்தை உடையவர், ஜந்மத்தாலும் (தாம் செய்யும்) விருத்தியாலும் தாழ்ந்தவரானாலும் நமக்கு ஜந்ம ஜந்மங்கள்தோறும் ஸ்வாமிகள்—என்கிறார்.

குறிப்புக்கள்:—மோக்ஷத்தில் இருக்கவேண்டுமென்றும் ஜந்மம் எடுக்கலாகாதென்றும் அறுதியிடுகின்ற ஆழ்வார் பல ஜந்மங்கள்தோறும் பகவானது தாஸர்களென்று உரைக்கக் கூடுமோ வென்றால்—வைஷ்ணவரான அடியார்களுக்குத் தாஸனாகின்ற பாக்கியம் ஜந்ம ஜந்மந்தோறும் கிடைக்குமாகில் மோக்ஷத்தை விட இதுவே சீரியது என்னுந் திருவுள்ளம்பற்றிக் கூறுகின்றாரென்று கொள்க.

பதக் குறிப்புக்கள்:—பயிலும் - விருத்தியாகும். ஒளி மூர்த்தி - தேஜோமயமான மூர்த்தி. பாற்கடல் சேர்ந்த பரமனை - தேவர்களின்பொருட்டு அமிர்தத்தைக் கடைந்ததற்கும், மஹா லெட்சுமியைத் தானடைவதற்கும், இடமா யிருந்ததைபற்றிப் பாற்கடல் பகவானுக்கு உகப்பென்பது திருவுள்ளம். பயிலும் பிறப்பிடைதோறு—மேலுக்குமேல் இனிவரப்போகிற ஜந்மாவகாசந்தோறும்.

2-ம் பாசுரம்.

ஆளும் பரமனைக் கண்ணனை
யாழிப் பிரான்றன்னைத்
தோளு மோர்நான் குடைத்தூ
மணிவண்ண னெம்மான் றன்னைத்
தாளுந் தடக்கையுங் கூப்பிப்
பணியு மவர்கண்டீர்
நாளும் பிறப்பிடை தோறெம்மை
யாளுடை நாதரே.

உரை:—"திருப்பாற்கடலினை விட்டு நீங்கி ஆச்ரிதரக்ஷணத்தின்பொருட்டு நாலு புஜங்களில் சங்கு சக்கர சாரங்காதி திவ்வியாயுதங்களுடன் அஸாதாரண ஆகாரத்தோடு வஸுதேவர் கிரஹத்தில் அவதரித்த தோஷரஹிதரான எம்பெருமானைத் தாளும் தடக்கையும் கூப்பி யாவர் பணிவாரோ அவரே நமக்கு என்றைக்கும் ஸ்வாமிகளென்கிறார்—ஆறாயிரப்படி-ஆழிப்பிரான் - எல்லாத் திவ்வியாயுதங்களுக்கும் உபலக்ஷணம்.

விசேஷக் குறிப்பு:—ஸ்ரீ கிருஷ்ணபகவான் வஸுதேவர் வைகிய சிறைச்சாலையின்கண் அவதரிக்கையில் கிரீடதாரியாய் நான்கு புஜங்களிலும் திவ்வியாயுதங்களைத் தரித்துக்கொண்டு பிறந்தார். இவ்விஷயம் ஸ்ரீமத் பாகவதத்தில் வியக்தம். வாஸுதேவர் இது கண்டதும் கம்ஸனது பயத்தால், இவ்வண்ணம் அஸாதாரணமான திவ்வியரூபத்தைத் தன் மைத்துனனை துராத்மா கஞ்சன் கண்ணுற்றால் கேடுவிளையுமென்று பயப்பட்டுச் சதுர்புஜங்களில் இரண்டினை உபஸம்ஹாரம் செய்துகொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தார். இதற்கிணங்கி ஸ்ரீ கிருஷ்ணன் இரண்டு கைகளை மறைத்துக்கொண்டாரேயாகிலும் கம்சனைக் கொன்ற பிறகு மீளவும் சதுர்புஜங்களைத் திவ்வியாயுதங்களுடன் ஸ்வீகரித்தார். இதுபற்றியே துரியோதனாதிகள், கிருஷ்ணன் வேஷதாரி என்று மதித்து வீண்மோசம் போயினர். இதை வேஷமென்றே உன்னிய மற்றொரு சிற்றரசன் பவுண்டரீகவாஸுதேவனென்பான் பகவானைப்போலே தானுமோர் வேடம் பூண்டு தனக்கு மற்ற இரண்டுபுஜங்களை ஒட்டவைத்துக்கொண்டானென்று ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பெற்றிருக்கும் ஹாஸியக் கதையை இங்கு ஞாபகமூட்டிக்கொள்ள வேண்டும்.

3-ம் பாசுரம்

நாதனை ஞாலமும் வானமு
மேத்து நறுந்துழாய்ப்
போதனைப் பொன்னெடுஞ் சக்கரத்
தெந்தை பிரான்றன்னைப்
பாதம் பணிய வல்லாரைப்
பணியு மவர்கண்டீ
ரோதும் பிறப்பிடைதோறெம்மை
யாளுடை யார்களே.

பதக் குறிப்புக்கள்:—ஓதும் பிறப்பிடைதோறும் - இந்த இந்தத் தீச் செயல்களைச் செய்தால் அவைகளுக்கு ஏற்ப இந்த இந்த நிந்திக்கப்படும் ஜந்மம் உண்டாகும் என்று வேதங்களும் சாஸதிரங்களும் ஓதுகின்றபடி, எத்தகைய நீச ஜன்மத்தில் பிறந்தாரெனினும் எம்பெருமானது திருப்பாதங்களைப் பிறர் நிக்

தைக்கும் ஹாலிபத்திற்கும் பயப்படாமல் கபடமின்றிப் பணியவல்லார் நமக்கென்றைக்கும் ஸ்வாமிகளென்கிறார். இவ்வண்ணம் தொழப்படுகின்ற பிரபு மனுஷர்களேயும் தேவர்களேயும் அளிக்கும் நாதன். அவனது வடிவழகு பூவைப் போன்று மனோஹரமானது. பொன்போன்ற சக்கராயுதத்தைப் பக்தர்களின் இடர்ப்பாடுகளைத் தீர்க்கும்பொருட்டு எப்போதும் தரித்துக்கொண்டிருக்கிறவன்.

4-ம் பாசுரம்.

உடையார்ந்த வாடையன் கண்டிகை
யன்னுடை நாணினன்
புடையார்பொன் னூலினன் பொன்முடியன்
மற்றும் பல்கலன்
நடையா வுடைத்திரு நாரணன்
தொண்டர்தொண்டர் கண்டீர்
இடையார் பிறப்பிடை தோறெமக்
கெம்பெரு மக்களே.

பதக் குறிப்புக்கள்:—கண்டிகை-கழுத்துக்கு ஆபரணம். உடைநாண்-அரையில் தரிக்கும் பொன் கயிறு. புடை - பக்கம், திருவுடலின் வலதுபக்கம், இதில் பூநூலணிந்திருப்பது வடபார்சுவத்துக்கெல்லாம் அலங்காரமாய் விளங்குகிறதென்று தாத்பரியம். மற்றும் பல்கலன் - வேறு விவரிக்காத அநேக ஆபரணங்கள், பகவான் திருமேனியில் காண்கின்றன என்கிறார்.

உரை:—மேற்குறிப்பில் கண்டபடி அவயவ சோபைக்கும் திருமேனிக்கும் தகுதியான திரு ஆடை ஆபரணங்கள். "நடையா உடை" என்றால்—"திருவுடைய நாரணனுக்கு இவை ஸஹஜமாய் இருக்கின்றன, என்பது பொருள். இவ்வண்ணம் திருவுருவும், முன்பாசுரத்தில் சொன்ன சுவர்ண ரூபமான சக்கராயுதமும், பூப்போன்ற திருமேனியும் பக்தர்களே அவனது வடிவழகுக்குத் தோற்ற அடிமைகளாக்கும். இப்படி ஈடுபாடு பெற்றிருக்கின்ற பக்தர்கள் பிறப்பிடைதோறும் நம் பெருமக்கள்—என்கிறார்.

5-ம் பாசுரம்.

பெருமக்க ளுள்ள வர்தம் பெருமானை யமரர் கட்
கருமை யொழியவன் றாமு தூட்டிய வப்பனைப்
பெருமை பிதற்றவல்லாரைப் பிதற்றுமவர் கண்டீர்
வருமையு மிம்மையும் நம்மையளிக்கும் பிராக்களே

பதக் குறிப்புக்கள்:—பெருமக்கள் உற்றவர்-உற்றவரான பெருமக்கள் என்று அன்வயிக்கவேண்டும், அதாவது தற்காலம் உற்ற பெரிய மனுஷர்கள். தம் பெருமானை - அதாவது எல்லாருக்கும் ஈசுவரனானவனை, அமரர்கட்கு - தேவதைகளுக்கு, அருமை - பிரயாஸம், ஒழிய - தீரும்படி. அன்று - தூர்வாஸ ஸாபதசையிலே, ஆரமுது - பூர்ணமான அமிர்தத்தை; ஊட்டிய அப்பனை - அளித்த ரக்ஷகனை, பெருமை பிதற்ற வல்லாரை - முன்பின் வரிசையைக் கவனியாமல் உற்சாகத்தால் கிரமமின்றிக்கே மஹாத்மியத்தை ஆதரத்தோடு துதிசெய்கின்றவரை; பிதற்றுமவர் கண்டீர் - புகழுகிறவர்கள், வருமையும் இம்மையும்-இந்தப் பிறப்பிலும் அடுத்த பிறப்பிலும்; நம்மை அளிக்கும் பிராக்கள் - நம்மை அவர்களைப்போலே ஸத்துக்களாக்கிக் கிருபைசெய்யும் பிரபுக்கள். அவர்களின் அனுஷ்டாநத்தை நாம் கண்டு திருந்தலாம்.

6-ம் பாசுரம்.

அளிக்கும் பரமனைக் கண்ணனை
யாழிப் பிரான்றன்னைத்
துளிக்கும் நறுங்கண்ணித் தூமணி
வண்ணனெம் மான்றன்னை
ஒளிக்கொண்ட ஜோதியை யுள்ளத்துக்
கொள்ளு மவர்கண்டீர்
சலிப்பின்றி யாண்டெம்மை சன்மசன்
மாந்தரங் காப்பரே

பொழிப்புரை:—உலகத்தை ரக்ஷிப்பதற்காகக் கிருஷ்ணவதாரம் எடுத்து உதவும் ஸ்வாமியாய், சங்கு சக்கிராயுததாரியாய், திவ்விய மது சிந்தும் திருத்துழாய் மாலையால் அலங்கிரதனாய், பரிசுத்த மணிபோன்றனாய் ஒளிகொண்ட தேஜஸ்-உடையவனாய், எனக்கு அஸாதாரண பிரபுவான எம் பெருமானை யுள்ளத்துத்தீர்க்கமாய்த் தியானிக்கும் ஜனங்கள் நம்மை ஜந்ம ஜந்மந்தோறும் ரக்ஷித்துப் பகவத் பக்தியில் சலிப்பில்லாமல் எம்மைத் தேற்றுவர்.

குறிப்பு:—முன்சென்ற பாட்டில் பகவத் பக்தர்கள் நடத்தையால் நம்மைக் காத்தளிப்பார் என்றார். இப்பாசுரத்தில் அவர்கள் மனஞ் சலிக்காமல் பகவானது பிரீதி ஒன்றையே பொருளாக நினைத்தலால் அவர்கள் மனோபாவத்தை உணர்ந்து ஜனங்களும் அம்மாதிரியாகவே வேறே பிரயோஜநத்தை எதிர்பாராமல் பக்தி செய்யக் கற்பிக்க உதவுவார்களென்பது திருவுள்ளம்.

தமிழ்ப் பாடம் 35.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[670-வது பக்கத் தொடர்ச்சி]

மக்கள்படுந் துயர்கண்டு ஆற்றாமல்நளன் "நீ குழந்தைகளை அழைத்துக்கொண்டு உன் தந்தையிடம் போய் இரு" என்று தமயந்திக்குச் சொல்ல, அவள் 'என்னநேர்ந்தாலும் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்' என்று நளனையும் தன்னோடு வருமாறு வேண்டுவதை இனிவரும் ஆறு செய்யுள்கள் கூறுகின்றன.

காத லிருவரையுங் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்
வீமன் றிருநகர்க்கே மீளென்றான் விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான். 63

குற்றமில் காட்சிக் குயிலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
கோக்கான் மழைபொழியா நொந்து. 64

கைதவந்தா னீங்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தா னெத்தனையுஞ் செய்தாலும்—மைதீ

மகப்பெறு மானிடர்கள் வானவர்த மூர்க்குப்
புகப்பெறார் மாதராய் போந்து. 65

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர். 66

சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலும்
என்னபய னுடைத்தா மின்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி. 67

போற்றரிய செல்வம் புனைவுட் டொடும்போகத்
தோற்றமையும் யாவர்க்குந் தோற்றுதே—ஆற்றலாய்
எம்பதிக்கே போந்தருளு கென்று ளொழிற்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன். 68

இன்னவாறு தன்னுடைய நகரிற்குச் சென்று வீமனோடுவைகலாம் என்று தமயந்தி அழைக்க நளன், அவ்வாறு செய்தல் இழிவென்று பின்னிரண்டு பாசுரங்களால் மறுக்கின்றான்:—

சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள். 69

பதப்பிரிவு:—சினம் கதிர் வேல் கண் மடவாய் செல்வர்பால் சென்று ஈ எனக்கு என்னும் இ மாற்றம் கண்டாய் தனக்கு உரிய தானம் துடைத்து தருமத்தை வேர் பறித்து மானம் துடைப்பது ஓர் வாள்.

பதவுரை.

சினம் - கோபத்தோடு
கதிர் - பிரகாசிக்கின்ற
வேல் - வேலைப்போன்ற
கண் - கண்களையுடைய
மடவாய் - மாதே,
செல்வர்பால் - செல்வமுடையவர்களிடத்தில்
சென்று - போய்
'எனக்கு - எனக்கு
ஈ - (ஒன்றைக்) கொடு'
என்னும் - என்று யாசிக்கின்ற
இ - இந்த
மாற்றம் - வார்த்தையானது;
தனக்கு - ஒருவனுக்கு
உரிய - பொருந்திய
தானம் - நிலையை
துடைத்து - அழித்து
தருமத்தை - (அவனுக்குரிய) தர்மங்களை
வேர் - வேரோடு
பறித்து - பிடுங்கியெறிந்து
மானம் - அவனது மானத்தையும்
துடைப்பது - அழித்துவிடுவதாகிய
ஓர் - ஒரு (நூதனமான)
வாள் - வாளிற்குச் சமானமாம்.
கண்டாய்- தெரியுமா! (என்றான் நளன்)

விரிவுரை:—என்ன இடுக்கண் நேர்ந்தபோதிலும் ஏற்பதுஇகழ்ச்சி என்னும் முறைமையைக் கடைபிடித்து நளன் இவ்வாறு மறுக்கின்றான். விதர்ப்பநாட்டிற்கு இவன் சென்றால், "எனக்கும் என் மனைவி மக்களுக்கும் நீசோறும் துணியும் கொடுத்துக் காப்பாற்றியருள்க" என்று தன் மாதுலனாகிய வீமராஜனை இரப்பதுதானே யாகும். அது செய்ய இவ்வுத்தமனுக்கு மனம்வரவில்லை. மற்றொருவனிடம் சென்று ஒருதரம் ஒன்றை யாசிக்கநினைத்துவிட்டால் பிறகு தன்னிடத்தில் எவ்வித நற்குணமும் தருமமும் நில்லாமல் அகன்றுவிடுமென்பது நிச்சயமான கொள்கை. எவனும் யாரிடத்திலும் எதற்காகவும் எந்த நிலையிலும் இரக்கப்படாது என்பதை வற்புறுத்துகின்ற

"ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்."

என்னும் திருக்குறளின் உட்கருத்து மிகவும் மேன்மையானது. கேட்பது தனக்காகவன்று, ஒரு பசுவிற்கு. அதுவும் விலையுள்ள பொருளன்று,வெறும் நீரே. அப்படியிருந்தாலும், "நீரின்றிச் சாகும் எனக்கிடக்கின்ற இப்பசுவிற்கு நீயே உன் முயற்சியால் நீர்கொணர்ந்து கொடுத்தால்கொடு; மற்று "இந்தப் பசுவிற்குகொடுக்கச் சிறிது நீர் தருமின், என்று யாரையும் போய்க் கேட்காதே. கேட்பாயாயின் உன் நாவிற்கு அதனிலும் இழிவானது வேறொன்றும் இல்லை" என்பார் மெய்த்திறம் விளக்கவந்த வள்ளுவநாயனார். ஆதலின், கோயில் திருப்பணிக்கென்றும் பொதுஜன நன்மைக்கென்றும் ஏழைகளுக்கு உதவவென்றும் ஊரூராய்ச் சென்று பொருள் இரந்து திரிகின்றவர்களின் செயல் திருவள்ளுவரின் விதிப்படி தக்கதென்று கருதற்கோ உரியதன்று.

குறிப்பு:—தருமத்தை, என்பது பெயர்ச்சொல். இது இரண்டாம் வேற்றுமை. இது முதல்வேற்றுமையாயிருக்குமானல் தருமம் என்றுநிற்கும். இந்தத் தருமம் என்றதோடு ஐ என்னும் இரண்டாம்வேற்றுமை உருபு சேர்ந்து வந்திருக்கிறபடியால், இரண்டாம் வேற்றுமைவிரி. தருமம் + ஐ என்னும் இரண்டும்சேர்ந்தால் 'தருமமை' என்றுதானே வரவேண்டும், அப்படிக்கில்லாமல் தருமத்தை என்று வந்திருக்கிறதே என்று திகைக்கவேண்டா. சிலசமயங்களில் ஒருவார்த்தையையும் அதனோடு வேற்றுமையுருபையும் சேர்த்துவைக்கச் சில எழுத்துக்கள் வரும். அப்படி வருபவைகளுக்குச் சாரியை என்று பெயர். தருமத்தை, என்ற சொல்லில் அத்து என்ற எழுத்துக்கள் சாரியையாக வந்திருக்கின்றன. தருமம் + அத்து + ஐ = தருமத்தை என்றாயிற்று. மகர மெய்யாகிய ம் என்னும் எழுத்தில் முடிகின்ற வார்த்தைகளோடு வேற்றுமையுருபுகள் சேரும்போது இந்த அத்து என்னும் சாரியை பெரும்பான்மை வந்தே தீரும். மரம், சிரம், கரம், பலம், நலம், அகலம் என்பன போன்று, ம் என்னும் எழுத்தில் முடிகிற எந்த வார்த்தையையாவது எடுத்துக்கொண்டு அதனோடு வேற்றுமையுருபைச் சேர்த்துப் பாருங்கள். இதுவரையில் நாம் கற்றிருக்கிற இரண்டாம் வேற்றுமை உருபு ஆகிய ஐயைச்சேர்த்தால், மரமை, சிரமை, கரமை, பலமை, நலமை, அகலமை என்று எங்கேயாவது வழங்குவதுண்டா? அத்து, என்னும் சாரியையை இடையிலே வருவித்துத்தான் சாதாரணமாய் அந்த ஐ என்னும் உருபை, ம் என்னும் எழுத்தில் முடிகிற வார்த்தைகளோடு சேர்த்துவைக்கவேண்டும். ஆகையால் அவை, மரத்தை, சிரத்தை, கரத்தை, பலத்தை, நலத்தை, அகலத்தை என்றுதான் வரும்,

அத்து என்பதுபோல், இன் உ என்பவைகளும் சாரியைகள். இவைகளல்லாமல் இன்னும் சில சாரியைகளும்தமிழில்இருக்கின்றன. அவைகளை அங்கங்கு வரும்போது பார்ப்போம். இச் சாரியைகள் எல்லாம் இடைச்சொற்கள். வேற்றுமை உருபுகளும் இடைச்சொற்களே.

மானம் துடைப்பது, என்றதில் மானம் என்பதும இரண்டாம் வேற்றுமையில்தான் இருக்கின்றது. ஐ, உருபு இல்லை என்பது உண்மையே. ஆனல் 'மானத்தைத் துடைப்பது' என்பதுதான் அதன் பொருள் ஆகையால் இது இரண்டாம் வேற்றுமைத்தொகை.

மன்னவராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
இன்னமுதந் தேக்கி யிருப்பரேல்—சொன்ன
பெரும்பே டிகளலரேற் பித்தரே யன்றே
அரும்பேடை மானே யமர். 70

என்றிப்படி, தமயந்தி நளனைவிட்டுப் பிரியவும், நளன் அவளோடு விதர்ப்பநகர்செல்லவும், சிறிதேனும்இசையாமல் இருந்தநிலையில் தமயந்தி, "ஆனல் நம் மக்களை மாத்திரம் என் தாதைபால் அனுப்பிவிடலாமே" என்று கீழ்வரும் பாசுரத்தில் கூறுகின்றாள்.

செங்கோலா யுன்றன் றிருவுள்ள மீதாயின்
என்கோன் விதர்ப்ப னெழினகர்க்கே—நங்கோலக்
காதலரைப் போக்கி யருளென்றாள் காதலருக்
கேதிலரைப் போல வெடுத்து. 71

நளனும் அதற்குச் சம்மதித்தானேனும் பெருந்துயரத்தால் கண்களில் நீர் ததும்ப அங்கிருந்தவோர் அந்தணனை நோக்கி, 'இம்மக்களை அழைத்துப்போய்த் தமயந்தியின் தந்தைக்குக் காட்டு' என்று சொல்லியதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்-தாதைக்குக்
காட்டு நீயென்றான் கலங்காத வுள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து. 72

இச்சொற்களைக் கேட்டுக்கொண்டிருந்த அம்மக்கள் பிரிவதற் காற்றாமல் அழுகின்றனர்.

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை யெதிர்நோக்கி—எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ வென்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீ ரழுது.

பதப்பிரிவு:—தந்தை திரு முகத்தை நோக்கி தமை பயந்தாள் இந்து முகத்தை எதிர் நோக்கி எம்தம்மை வேறு ஆக போக்குதிரோ என்றார் விழி வழியே ஆறு ஆக கண் நீர் அழுது.

அன்வயம்:-தந்தை திருமுகத்தை நோக்கி, தமைப் பயந்தாள் இந்து முகத்தை எதிர்நோக்கி, விழிவழியே கண் நீர் ஆறாக அழுது, "எம்தம்மை வேறு ஆகப் போக்குதிரோ" என்றார்.

பதவுரை.

தந்தை-(மக்களிருவரும்) தம் தந்தையினுடைய
திரு - அழகிய
முகத்தை - முகத்தை
நோக்கி - பார்த்து,
தமை - தங்களை
பயந்தாள் - பெற்றவளுடைய
இந்து - சந்திரன்போன்ற
முகத்தை - முகத்தை
எதிர் - எதிராக
நோக்கி - பார்த்து,
விழி - தம் கண்களின்
வழியே - வழியாக
கண்நீர் - கண்ணீரை
ஆறு ஆக - ஆறுபோல
அழுது - அழுது,
"எம் தம்மை - எங்களை
வேறு ஆக - வேறுஇடம் போக
போக்குதிரோ - அனுப்பிவிடுகின்றீர்களோ !"
என்றார் - என்றார்.

விரிவுரை:—முன், 'வழியானதெல்லாம் கடந்தோமோ?" என்று கேட்டதுபோலவே, இங்கும் இம் மக்கள் தம்பெற்றோர் இருவருடைய முகத்தையும் நோக்கியே கேட்கின்றனர்.

குறிப்பு:—(1) பயந்தாள், என்பது வினையாலணையும் பெயர். பயந்தவளுடைய என்றாகும்

(2) முகத்தை, என்பது இரண்டாம் வேற்றுமைப் பெயர்ச்சொல்—வி?. அத்துச்சாரியை பெற்றிருக்கின்றது.

(3) போக்குதிரோ, என்பதிலுள்ள ஓகார இடைச்சொல் வினவுடன் இரக்கப்பொருளிலும் வந்திருக்கின்றது.

அஞ்சனந்தோய் கண்ணி லருவிநீ ராங்கவர்க்கு
மஞ்சனநீ ராக வழிந்தோட—நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாள் மக்களைத்தன் மார்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து. [போடும் 74

பதப்பிரிவு:—அஞ்சனம் தோய் கண்ணில் அருவி நீர் ஆங்கு அவர்க்கு மஞ்சனம் நீர் ஆக வழிந்து ஓட நெஞ்சு உருகி வல்லி விடா மெல் இடையாள் மக்களை தன் மார்போடும் புல்லி விடாநின்றாள் புலர்ந்து.

அன்வயம்:—வல்லிவிடா மெல் இடையாள் மக்களைத் தன் மார்போடும் புல்லி,நெஞ்சு உருகிப் புலர்ந்து, அஞ்சனம் தோய் கண்ணில் அருவி நீர் ஆங்கு அவர்க்கு மஞ்சனம் நீர் ஆக வழிந்து ஓட, விடாநின்றாள்.

பதவுரை.

வல்லி - பூங்கொடியின் தன்மையை
விடா - ஒருபோதும் நீங்காத
மெல் - மெல்லிய
இடையாள் - இடையை உடைய தமயந்தி,
மக்களை - மக்களை
தன் - தன்னுடைய
மார்போடும் - மார்பினோடு
புல்லி - அணைத்துக்கொண்டு
நெஞ்சு - மனம்
உருகி - உருகி
புலர்ந்து - வாட்டம் எய்தி,
அஞ்சனம் - மை
தோய் - தோய்ந்திருக்கின்ற
கண்ணில் - கண்களிலிருந்து
அருவி - அருவிபோல் வழிகின்ற
நீர் - நீரை
ஆங்கு - அங்கே

அவர்க்கு - அம்மக்களுக்கு
மஞ்சனம் - குளிக்கின்ற
நீர் - ஜலம்
ஆக - ஆகும்படி
வழிந்து - வழிந்து
ஓட - ஓடிக்கொண்டிருக்க
விடா - விட்டு
நின்றாள் - நின்றாள்.

விரிவுரை:—மக்களைவிட்டுப் பிரியத் தரியாளாகிய தமயந்தி குழந்தைகளைத் தன் மார்புற அணைத்துக் கண்ணெனும் கலசநீர் ஆட்டினள், என்பது இச்செய்யுளின் கருத்து.

குறிப்பு:—(1) வல்லி விடா மெல்லிடையாள், என்பதிலுள்ள விடா என்பது விடாத என்று இருத்தல் வேண்டும். ஆதலால் அது பெயரெச்சம். ஆனல், த என்னும் கடையெழுத்து இல்லாமல் கெட்டுப்போய், விடா என்று நிற்பதால், இது ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்

(2) புல்லி விடா நின்றாள், என்றதில் உள்ள விடா என்பது விட்டு, என்னும் பொருளில் வந்திருக்கின்ற உடன்பாட்டு வினையெச்சம். இந்த உருவத்திலேயே விடாமல், என்று எதிர்மறைப் பொருளிலும் அது வினையெச்சமாக வருவதும் கூடும். ஆனல் இங்குக் "கண்ணீர் வழிந்து ஓடவிடா நின்றாள்," என்றதால் ஓடவிட்டு நின்றாள் என்னும் பொருளே பொருந்தும்.

ஒரேசொல் ஒரே உருவத்தில் பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் வினைமுற்றாகவும் வரக்கூடுமென்றும் வினையெச்சமாக இருக்கும்போது உடன்பாடு எதிர்மறை என்னும் இரண்டு பொருள்களையும் ஏற்கக் கூடுமென்றும் முன் விளக்கியிருப்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

புறவொடு புலம்பல்

அருந்தமிழ் ஆய்வோர்க்கு வானோரருந்தும் மருந்தேபோல் மகிழ்வூட்டுவன மிகப்பல நயமிகுந்த அகப்பொருட்செய்யுட்களே. அகப்பொருள், களவுகற்பென இருபிரிவுகள் உடைத்து. அவற்றுள் களவே அன்பின் திறனை இன்புறவிரிப்பது. களவினகத்தும் பாலைத்திணையே ஏனைத்திணைகளினும் உளத்தொளித் திருக்கும் அன்பினை விளக்கி வெளிப்படுத்தும். பாலைத்திணையின் ஒருபகுதி திடன்போக்கரிய கற்பினைப் புலப்படுத்தும் உடன்போக்கென்பது.

உடன்போக்காவது யாதெனின், தலைவன் தலைவியருக்குள் நிகழ்வதாகிய களவுக்கூட்டம் சிலர் பலரால் அறியப்பட்டது எனத் தோழிக்குத் தோன்றவே, அவள், தலைமகன் வந்து பயின்றவிடத்தே சென்று, அவனைக்கண்டு, "நீ தலைவிக்களித்த தலையளி பலராலும் அறியப்பட்டு அலராயிற்று; தலைவியைப் பொன்னணிவான் புகுந்து நின்றாரும் பிறர் உளர். நீ உலகந்தரினும் எம் தலைவிக்கு விலையெனக் கொள்ளார் எமர்; ஆதலின் உன்னால் ஆவதை விரைந்து செய்வாயாக" எனப் படைத்துமொழிந்தாள். அதுகேட்ட தலைமகன் "தலைவியையான் உடன்கொண்டுபோகத் துணிந்தேன்" என்றான். தலைவன் துணிவைப் பாங்கி தலைமகளுக்கு உணர்த்தினள். "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்—செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல்)—ஆதலின் கற்பழியாமை நன்றெனக் கருதி உடன்போக்கு நேர்ந்த தலைவி, தலைசாய்த்து நிலங்கிளையாநின்றாள். அஃது உடன்படுகுறிப்பென்று உணர்ந்த தோழி தலைவியை அழைத்துச்சென்று தலைவன்கைப் படுத்து, "தாயுடன் றலைக்குங்காலையும் வாய்விட்டன்ன யென்னுங் குழவிபோல - இன்னா செயினு மினிது தலையளிப்பினும் நின்வரைப்பின ளென்றோழி" (குறுந்தொகை) என ஓம்படைசாற்றி விடுத்தாள். தலைவன், "அழிவிலர் முயலு மார்வ மாக்கள் வழிபடு தெய்வங் கட்கண் டாங்கு" மகிழ்ந்து உடன்கொண்டு சென்றனன். தலைவனுக்கே பிச்சியான தலைவி, 'அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்து, அகலிடத்தாராரத்தை யகன்று, தன்னை மறந்து தலைவன்றாளடைந்த மகிழ்வினளாய், நடந்து, "நிழல்காண் டோறும் நெடியவைகி மணல்காண்டோறும் வண்டறைஇ' வருந்தாதேகிக் குறும்பல் லூர்கடந்து உடன்சென்றனள்; என்றின்னவை கூறும் பகுதியாம்.

வருந்தியீன்றாளையும் வளர்த்தாளையும் ஆயத்தாரையும் ஆடியவிடத்தையும் பொருட்படுத்தாமல் ஏதிலனொருவனோடு இச்செல்வமடந்தையை உடன்போகச் செய்யும் அன்பின் ஆற்றல் அளப்பவும் எளிதோ!

இங்ஙனம், தலைவி கற்பொடுபுணர்ந்து உடன்போயினமையைப் பிற்றைநாள் உணர்ந்த, தலைவியின் இல்லத்தார் பெரியதொரு கௌவை நிகழ்த்துவர்' இதன் சார்பான செயல்களை விரித்துக்கூறும் பகுதியினைக் கற்பொடுபுணர்ந்த கௌவையென்பர் அன்பினைந்திணை நூலறிஞர். அக் கற்பொடு புணர்ந்தகௌவையிற் புறவொடுபுலம்பலும் ஒரு துறையாகும்.

தலைவியின் உடன்போக்குணர்ந்தபின், அவள்தன் மனைவாழ்வோரில், அவளைப் பிறந்தநாள் வளர்த்திய செவிலி, மனமிக வருந்தினளாய், "அந்தோ, என் மகள் தேற்று வேங்கடம் நல்ல தலங்கொலென்றாள். நான், அவளுட்கருத்தறியாது மிக்க மேன்மைத்தென்றேன்! இராமேச்சுரம் போதல் நல்லதா, என்றாள். மிக்க புண்ணியம் பயக்குமென்றேனே ! அன்னுப் நாளைத் தண்ணீரில்லாத பாலைவன்னிக்கு விடுக என்றாள். அங்ஙனமே யாகட்டுமென்றேனே" ! என்று தன் அறியாமைக்கிரங்கினள். "ஐயோ! செய்ய பஞ்சனையும் பொறாது சிவந்து கொப்புளமாகும் என் மகளின் மெல்லடிகள் நெருஞ்சிப் பழமெனப் பரல்தைக்கும்படி தீயுங் கானலில் வேனிலில் எப்படிப் போகும்; காடு சேர்கையிற் காடி வேங்கைகள் காட்டுமோ ராரவாரம் கேட்டுக்கலங்குவா ளந்தநேரம்" என அவள் அச்சத் தன்மைக்கும், "வாசல் கடந்தளவே வெகுதூரம்வந்தவள்போல் நமதூரில்வந்திலமோவென்றறியாமல்நின்று புலம்பும்" என அவளுடன் அறியாத் தன்மைக்கும் உளமெலிந்திரங்கினள். வேகத்தோடு பறந்து செல்லுங்

காகத்தைக் கண்ணுற்றுக் "குணங்க ளஞ்சாற் பொலியுங் குலக்கொடியே, இனிநீ உணங்கலஞ்சா துண்ணலாம். என்மனங் கரையாமல் என் மடக்கொடி வர நீ ஒருகால் கரைவாயாக' என்று வேண்டினாள். "வெப்பத்திற்கஞ்சி மேகமும் மீது படர்ந்தறியாத அப் பாலைவனம், என்மகள் செல்லும்போது மருதநிலம் போலத் தண்ணிதாக" வெனச் சுரந்தணிவித்தாள். "பின்னர் என்மகள் எங்குச் சென்றிருப்பினும் தேடிப்பிடித்து இங்குக் கொணர்வேன்" எனத்துணிந்து தேடிப் பின் செல்லலானாள்.

ஆதவன் வெப்பம் மேனியெல்லாஞ்சுட, நிலத்தின் வெப்பம் பாதத்தைச்சுட, நாவினீர் வற்றிக் கண்ணீர் பெருகத் தன் மகளைத் தேடிச் சென்ற செவிலி ஆங்கொரு புறவினைக் கண்டனள்; உள்ளத்திற்கவலை எள்ளளவுமின்றிக் கள்ளியங் கவட்டிடைப்பள்ளிகொண்டிருக்கும் அதனைக் கண்டவுடன் நெஞ்சுநிறைந்த துன்பம் பொங்கத் தொடங்கியதுபோல் தன்னுட்சில கூறுவாளாயினள். "செந்நெருப்பினையே தகடாகச் செய்து பரப்பிவைத்தனைய இச்செந்தரையில், தான் அன்புறுகின்ற கள்வனோடு என் மகள் செல்லும்போது, இங்கு இன்புறுகின்ற இப் புன்புறா, அவளைத் தடுத்துத் துன்புறா வண்ணம் விலக்கியிருந்தா லாகாதா? பகைவ ரல்லற்படப் பார்த்துமகிழும் வன்கண்ணரைப் போலிறுமாந்திருக்கின்றதே" என்றாள். கொதிப்புற்ற துன்பம் நெஞ்செனுங் கொள்கலத்திருந்து குதித்து வாய்வழி வழிந்தாற்போலப் புறவினை நோக்கிப்புலந்து சில மாற்றம் புகன்று புலம்பினள். அப் புலம்பலே புறவொடு புலம்பலாம்.

புறவொடு புலம்பலென்னும் இத் துறையமைந்த அழகிய பாடலொன்று பதினோராந் திருமுறையில் நம்பிகொண்டார் நம்பிகள் புனைந்த ஆளுடைய பிள்ளையார் திரு மும்மணிக் கோவையினிடையே நோக்கப் பட்டு மிளிர்கின்றது. அது வருமாறு:—

ஆசிரியப்பா

புனலற வறந்த புன்முளி சுரத்துச்
சினமலி வேடர் செஞ்சர முரீஇப்
படுகலைக் குளம்பின் முடுகி நாற்றத்
தாடு மாவி னகடு தீயப்
பாடு தகையின் பஞ்சுரங் கேட்டுக்
கள்ளியங் வட்டிடைப் பள்ளி கொள்ளும்
பொறிவரிப் புறவே யுறவலை காணீ நறைகமழ்
தேம்புனல் வாவித் திருக்கழு மலத்துப்
பையர வசைத்த தெய்வ நாயகன்
தன்னருள் பெற்ற பொன்னணிக் குன்ற
மான சம்பந்த மண்மிசைத் துறந்த
ஞான சம்பந்தனை நயவார் கிளைபோல்
வினையே னிருக்கு மனை பிரியாத
வஞ்சி மருங்கு லஞ்சொற் கிள்ளை
யேதிலன் பின்செல விலக்கா தொழிந்தனை
யாதலிற் புறவே யுறவலை நீயே.

என்பது.

புறவே புறவே! இச்சுரம் நீரென்பதன் பேருமொழிய வறந்தது. விசும்பிற்றுளி வீழாமையாற் பசும்புற்றலையும் காண்பரிதாய் முளிந்து கிடக்கின்றது. வழித்தலைச் செல்வோர் தலையைத் துணித்துக் கவந்தமாடுங் கூத்தினை யுவந்துகாண்பவராகிய சினம்மிகுந்த வேடுவர்கள் ஏவிய செஞ்சரம் பாய்ந்து மாய்ந்த கலைமான் குளம்பின் முடைநாற்ற மிக்கது. ஆடும் அரவின் அகடுந் தீயும். இங்குப் பாடும் பஞ்சுரப்பண்ணை நின்செவியேற்றுக் கள்ளியங் கவட்டிடைப் பள்ளிகொண்டிருக்கின்றனையே, பொறிவரிப் புறவே! என் மகள் பாவியேன் வீட்டுவாயிலைக் கடந்தறியாதவள்; வஞ்சிபோலிடையினள். கொஞ்சு கிளிபோன் மொழியினள். என்னை வெறுக்க ஓரேதுவுமின்றி அவள் ஓரேதிலன் பின் சென்றனளே; மணம்கமழும் இனிய புனல்நிறைந்தவாவிகள் மலிந்த திருக் கழுமலநகரின்கண் தோன்றினவரும் பையரவமணிந்ததெய்வநாயகன்றன் அருள் பெற்றவரும் பொன்னணிக்குன்ற மன்னவரும், மான சம்பந்த மண்மிசைத் துறந்தவருமான எம் ஞானசம்பந்தப் பெருமானை நயவாதவர் கிளைபோல இவ்வழியே சென்றனளே! நீ இங்குக் கண்டுதானே இருந்தனை. வஞ்சியே நின் தாயை நீ வஞ்சியேல். அவள் மணந்தரியாள். நின் பஞ்சினு மெல்லடியும் பரல்தைக்கப் பதைக்குமென்று விலக்கா தொழிந்தனையே. ஆதலின் நீ உறவலை, புறவே உறவலை, புறவே—என்று பொருள்படும்இப்பாட்டின் பெருமைப்பாட்டினையுன்னுந்தோறும் தேனுண் வண்டெனச் சிந்தை களிப்பாரல்லரோ செந்தமிழ்வாணர்?

இத் திருப்பாட்டில் சுரத்தின் வெப்பமும் வேடர்தம் வினையும், புறவின் பள்ளியும், அது நுகர் பண்ணின் இசையும், தலைவியின் கற்பும் தலைமகன் அற்பும், செவிலியின் துயரும், முத்தமிழ் விரகன் முடியாப் புகழொடு உள்ளத்துத் தெள்ளிதில் புலப்படத் தோன்றுகின்றனவன்றோ!

ஷெல்லி

[672-வது பக்கத் தொடர்ச்சி]

ஒருவர்பின் ஒருவராக மாலுமிகள் இறந்தனர்; இந்த நாள் சாயங்காலம் கடுங்காற்றின் நெடும்படைகளென்ன மேகசாலங்கள் முடுகியடர்ந்தன. மாலுமிகளில் எழுவர்தாம் எஞ்சியிருந்தவர்; அவர்களில் அறுவரை இடியேறொன்று கொன்றுவீழ்த்தியது; அவர்கள் "மம்மி" அல்லது சுகந்த திரவியமிட்டுக் காக்கப்பட்ட கரிய பிணங்களைப்போல் கப்பலில் வீழ்ந்து இறந்து கிடந்தனர்; எஞ்சியிருந்த ஏழாவது மனிதனது மார்பிலும் முதுகிலும், கப்பலின் முன்பாகத்திலுள்ள கூரிய தேக்கமரப்பலகை ஒன்று ஊடுருவிச் சென்றது. கப்பலின் அழிவின்மேல் இன்னொரு அழிவு கிடந்ததைப்போல, இம்மனிதனது அழிவும் கிடந்தது.

இன்னும் எவரேனு மிருந்தனரோ! - ஆம் - சுக்கானுக்கு அருகில் ஒரு மாது உட்கார்ந்துகொண்டிருக்கின்றாள். ஆகாயம், நக்ஷத்திரங்கள் இழைத்த தனது கூந்தலை அவிழ்த்துவிட்டு, பூமியின் மேலும் கடலின் மேலும் சூரியனுடன் அமிழ்கின்ற காட்சிக்கிடையே அவள் மிக அழகாய்த் தோன்றினாள். அவள் ஒரு ஒள்ளிய குழந்தையைத் தனது முழங்காலிடை இருத்தி, மார்போடு அவ்வப்போது அணைக்கின்றாள். அக்குழந்தை மின்னலைப்பார்த்துச் சிரிக்கின்றது. கடலோடுங் காற்றோடுங் கலந்துருமும் இடியினை அக்குழந்தை பரிகாசஞ் செய்கிறது. விருப்பமும்வியப்புங் காட்டிக் காட்டி அப்பச்சிளங்குழவி, ஒடுங்கிக் கிடந்த புலிகளை எழுந்து தன்னருகில் வரும்படி சைகை செய்கின்றது. புலிகளின் கண்களில் பயத்தினாலுண்டான ஒளி, வால் நக்ஷத்திரங்களைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பிரகாசிக்கின்றது. அக்குழந்தை புலிகளின் கண்களோடு இப்போது அச்சமற்று விளையாடும்; குழந்தையின் இருதயம் அதிவேகமாயத் துடிக்கின்றது; இருதயத்தில் தீப்போல் சுடரும் உவகை அக் குழந்தையின் கண்களுக்குப் பிரகாசம் கொடுக்கின்றது. அதன் அன்னையின் கண்களோ ஒளியின்றி மங்கியிருக்கின்றன. "என் கண்மணியே, புன்சிரிப்புப் புரியாமல் இனிது நீ அமர்ந்துறங்கு; அதனால் நமக்கு வரவிருக்கும் துன்பத்தை யறியாமற் போகக்கடவை. அத்துன்பம் எத்தன்மையதா யிருந்தாலு மிருக்கலாம்; அதைப்பற்றி நான் அறியேன். எனினும் அது பயங்கரமானதே. அதை நீயும் நானுமே பங்கிட்டுக்கொள்ளவேண்டும்.

"கனவுகாண்! உறங்கு! பயத்தினால் வெண்மைநிறமடைந்துபோன எனது மார்பு உனக்கு அசைந்தாடும் தொட்டிலாகவும் படுக்கையாகவு மிருக்கட்டும். குழந்தாய்! எனது இதயம் உன்னை ஊசலாட்டாதோ! அது பயத்தினால் துடிக்கிறது! ஐயோ! என்ன வாழ்க்கை! என்ன மரணம்! நாமெல்லாம் என்ன! இக்கப்பல் அமிழும்போது, நாம் உயிர்துறக்கவேண்டியதாகும். என்ன! உன்னை இனிமேல் பார்க்கமுடியாமற் போகவேண்டியதே; உன்னை இனிமேல் கண்டு, இனிய உணர்ச்சிகளை யடைந்து, அதனாலுண்டாகும் ஆனந்தத்தை அனுபவிக்கமுடியாமற் போகவேண்டியதே. முன்பு நாமிருவரும் எவ்வாறு அன்புடனும் இணைபிரியாமலும் இருந்தோமோ, அவ்வாறே உயிர் நீங்கிய பின்னும் இருக்க முடியுமா? உனது இனிய கைகளை இனிமேல் நான் தொடுகின்ற பாக்கியத்தை இழக்கவேண்டியவளாகின்றேன்; உனதுகண்களை நான் பார்க்கும் பாக்கியத்தை இழக்கவேண்டியவளாகின்றேன். இனிய ஆன்மாவே! நீ இன்னும் அவ்வழகிய உதடுகளையும் பிரகாசிக்கின்ற மயிரையும் மற்றுள அழகிய உறுப்புக்களையும் உடைத்தாயிருக்கின்றாய்; இவ்வழகெல்லாம் மாறுவேடம் போலும்; ஏனெனில் இறந்துபோனபோது இவ்வழகெல்லாம் யாண்டு மாயமாய் மறைந்துவிடுகின்றதோ? அழகெலாம் திரண்டு உருண்டு உருப்பொருந்தி வந்ததை நான் எனது குழந்தை என்று நாடோறும் அழைத்து வந்தேன். இவையாவும் இப்போது வானிடு வில்போலக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடுகின்றது. நான் ஆகாயத்திலிருந்து பூமியில் விழுந்த மழைத்தாரை போலிருக்கின்றேன்"

ஐயோ! இக்கப்பல் நின்றுவிடுகின்றது; இது தலைகீழாகக் கவிழ்கிறன்து, காற்றிற்கெதிராயுள்ள பாகம் தண்ணீரில் ஆழ்கின்றது; மெதுவாக எழுகின்ற உப்புநீர் பட்டவளவில் கப்பலிலுள்ள புலிகள் மேலே குதிக்கின்றன. அவ்வுப்புநீர் அங்குலம் அங்குலமாக அவைகளின்மேல் ஊர்ந்துவருகின்றது; இப்புலிகளின் மயிர் காதுகள் முழங்கால்கள் அவயவங்கள் யாவும் பயத்தினால் இரத்தவோட்டமின்றி விறைத்துக்கிடக்கின்றன; நீண்டதும், கம்மலானதும் உரத்ததுமான ஒரு கர்ஜனை அவைகளின் அடிவயிறுகளினின்றும் அதிஉக்கிரமாய் உடனே எழுந்தது. அவைகளின் தொனி பள்ளத்தாக்குக்களுடைய மலையனைய அலைகளினால் சுமந்துசெலுத்தப்படுகின்றது. மேலும் அத்தொனி செங்குத்தான கன்மலையிலிருந்து குகைவரைக்கும் பிரதிதொனிக்கின்றது. கசைபோல வீசிவீசி மோதுகின்ற மொய்த்த நெடும் மழைத்தாரைகளுடன் புலிகளின் கடுங்குரல் கலக்கின்றது. பிரசண்டமாருதத்தின் பலத்தினால் இம்மழை தாமதமின்றியும் வேகமுடனும் பெய்கின்றது. மேற்குத் திக்கிலிருந்து வீசிய கடுங்காற்று கிழக்குத்திக்கி லுதிக்கும் சூரியனது வாயிற்படியின் வழியாகச்சென்றது. புல் பூண்டு விளையாத வெறுந்தரை வழியாக ஒரு யானையின் உருவத்தைக் கண்ட பாம்பொன்று அம்பினும் வேகமாய்த் துறத்தி ஓடுவதைப் போலச் சண்டமாருதம் மழையாகிய ஆற்றைக் குறுக்கிட்டுப் பிரித்தது. காகம்போல் கருநிறம்வாய்ந்து பெருவோலமிடுகின்ற மழையானது வானிற்குங் கடலிற்குமிடையே தானுமோர் கடலென்னப் பெருகியது. உலகத்துக்கு வரம்புபோன்ற மேகங்களின் அருகில் இம் மழைத்தாரை வந்து சேர்ந்தது. அம்மேகங்கள் கடலையே தமக்கு அடிப்படையான ஆதாரமாய்க் கொண்டிருந்தன. ஆகாயத்தில் சுருண்டு சுருண்டு அடர்ந்திருந்த இவை காற்றினது கோபுரத்தை மதிற்சுவர்களைப்போல் சூழ்ந்துகொண்டு தாங்கின. காற்றோ மேகங்களைத் தனது அரண்களாயுள்ள செங்குத்தான கன்மலையைக் கிழிப்பதுபோல் இரு பாகங்களாகக் கிழித்தது. அடர்ந்து நெருங்கிய மேகங்கள் அழிவுற்றும் கந்தல்களைப்போலக் கிழிவுற்றும், பூகம்பத்தால் சிதறுண்ட ஒரு ஆலயத்தினது கற்களைப் போலும், அவைகளினின்றும் விழுந்த தூசுகளைப் போலும், சுழல்காற்றில் எறியப்பட்டுக் கிடந்தன. மேலும், இம்மேகங்கள் நீரோட்டத்தில் பொங்கி எழும் நுரையைப் போல நாலாபக்கமும் சிதறுண்டு கிடக்கின்றன.

199149

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

m 211,N28lcN
N32.8.35

பொதிகை நிகண்டு

[673-வது பக்கத் தொடர்ச்சி]

ஐந்தாவது இடப்பெயர்த் தொகுதி.

மாலிலா னந்தநில நிருவாணம் வீடு
  வாழ்சிவங்கை வலஞ்சித்தி முத்தம்விப வருக்கங்
காலுமுத்தி கேவலம்பஞ் சமகெதிமீ ளாத
  கதியமுத மோக்கமுமோட் சமதாகு முவனை
மேலுலகு கோவில்வா னகம்புவனஞ் சுவர்க்கம்
  விசும்பும்ப ருயர்நிலைபுத் தேளுலகு கற்பம்
சிலவிமா னமுந்தேவ லோகமதாஞ் சேடி
  சேணிவிஞ்சை யூர்பவண நாகருலக துவே. 186.

அதமதோ கதிபிலம்பா தாளம்பா தலமா
  மளறுகும்பி சிறையிருளா விரமுழல் பூதி
* புதவுசுவப் பிரநரகந் திகிரிதுர்க்க நிரையம்
  புலவுகார கம்பவர்க்க மள்ளலிவை நரகா
* முதுவிசும்பம் பரமுலகு தேந்திசைகோக் ககுப
  முகமரித மாசைமா திரம்புலமே காட்ட
மிதுதிக்காங் கிழக்குப்பூ ருவங்குணம் பிராசி
  யிந்திரியே குணக்கிரவி யோனிகீழ்த் திசையே. 187.

திசையினிற்சி வேதைதெற்குத் தெக்கணமே வாசி
  தென்றிசையா மமுமாம்பச் சிமங்குடக்கு †மேன்மேற்
* குசிதமுறு பிரத்திசைவா ருணங்குடமேல் திசையா
  முத்தரமு தீசியுதி யுதக்குவட திசையாம்
வசுதைமே தினியுலகு தலம்புடவி தரணி
  மண்கிடக்கை தரைபாலம் பிருதுவிகா சினிபூ
அசலைதாத் திரிநகந்த § ராதலங்கோ விபுலை
  யம்பரியம் புயநாக தாரையுகம் புவியே. 188.

புவனிதரித் திரிசகமண் டலஞாலம் வையம்
  புவனமக விடஞ்சாந்தை மகிநேமி பாரி
பவனம்வசு மதிவிசுவம் பொழில்வேலா வலயம்
  பாத்திபம்வை யகமிம்பர் படிதாலம் பொறையே
யவனிதா ரணிபணைசக் கரநிலங்கோத் திரிபா
  ரளக்கர்வசுந் தரையிகம்ப ஞூதரிதா பரமே
குவலயமா * திரந்தரைபூ தலந்திணைபூ தியமுங்
  குவ்வுமறு பத்தாறும் பூமியின்பேர் நாடே. 189.

நாடுகண்ட நீவரமண் டலமேணி தேச
  நல்லமுவஞ் சனபதம்பை திரமுலகு பாண்டில்
கூடுசும்மை தண்ணடையே பொழில் * பதிஞன் காகுங்
  குறிச்சிநிலம் பட்டினநி வேசனஞ்சம் வாகம்
பாடிபுரம் பூண்டிவே சனநியமம் பாக்கம்
  பதிநகர்வைப் புறையுள்குறும் பகரநொச்சி வேலி
கேடக நிகாயஞ்சோ † பணமுட்டம் வசதி
  கிளர்சேரி பூக்கம்பூ ரியம்வாழ்க்கை குடியே. 190.

குடிக்காடு புரியருப்பம் பக்கணங் கிராமங்
  குகைமடம்பம் பள்ளிகோ சரங்கற்பம் பாண்டி
படப்பைதா வளநிலையங் குடம்வாசஞ் சரணம்
  பாழிசும்மை கறுவடம்பேட் டகலுள்பட்டி யிருக்கை
திடத்தாமங் கடைநகரங் குலங்குப்பங் கோட்டஞ்
  * சேர்வுவாழ் வறுபானென் றுகுமூர்ப் பொதுப்பேர்

தடக்கிரிசார் குறிஞ்சிசுரஞ் சார்பாலை காடு
  சார்முல்லை நாடுசார் மருதநெய்தல் கடலே. 191.

கடகமுவ ளகஞ்சால மோதையெயில் வரைப்புக்
  காப்பரண்வெண் ணகையகப்பாப் புரிசையிஞ்சி யாரை
தடமதிள் வளாக நொச்சி யாரல்சிறை வேலி
  † தளிவேதி பிரகாரம் வாரியுடன் கோட்டை
துடர்வளையம் *வேங்கைசுற்றின் மதிற்பேர்நா லேழாந்
  தோணிவிதப் பெந்திரங்கோ சந்தைப்பு நாஞ்சில்
படர்ஞாயின் மதிலுறுப்பாங் கிடங்கோடை யகப்பாப்
  * பதவுடுப்பாம் புரிகேணி பரிகமகழ் வாயே. 192.

வாயில்கடை புழைதோட்டி தூம்பொடுது வாரம்
  வாரியும்வா சற்பேராங் கோபுரநீள் வாயிற்
சேயபெரு வாயிலுமாம் புதவுகுறும் புழையே
  திட்டியின்பே ராம்வாசற் * படிகருக்கு நகமாம்
பாயும்வழித் திண்ணையின்பே ரளிந்தமாம் பதணம்
  பரிகமுமுப் பரிசையகப் பாவுமே டையின்பேர்
சாய்விலர மியநிலா முற்றப்பேர் மானஞ்
  சமத்தமும் வேரமுமாகு மண்டபப்பேர்ப் பொதுவே.

பொதிமன்றம் பலமன்றம் பொதுசபையார் தெற்றி
  பொற்சாலை யம்பலஞ்சித் திரகூட முப்பேர்
விதிதாணி வேத்தவையத் தாணியரண் மனையும்
  வேந்திருக்கை யாங்குலமா ளிகைபவனஞ் சால
மதியதிரு மனைகோயி லரசிரிற்பேர் பள்ளி
  யறச்சாலை யறப்புறமு மாந்தளியே சாலை
மதிகோட்டஞ் சேதியஞ்சன் னிதிநிலையங் கோயின்
  மந்திரநி கேதனந்தே வாலயப்பேர் சேரே. 194.

சேர்புவயின் பாத்திமா ளிகைமாடம் புக்கில்
  செறிவசதி யிடவகைமந் திரமுறை யுளில்லஞ்
சாருமனை யகமில்லென் றீரேழும் வீடாந்
  தாழ்குச்சிற் குரம்பைபுரை கூரைசிற்றில் குடிலா
மாருறையுள் கந்தவா ரமுமந்தப் புரமா
  மட்டிலடுக் களைபாக சாலையுணக் கோட்டம்
கூர்மடைப்பள் ளியின்பேர்குட் டிமம்படுத்த பூமி
  குறடுதிட்டை மண்ணீடு திண்ணைவே திகையே. 195.

வேதியே யோமகுண்ட மாம்பள்ளி பாழி
  வியன்மடந்தா பதங்காண்டை முனிவரிருப் பிடமா
மோதுமிறை * வளவிவீட் டிறப்பாகும் விடங்க
  முகடாமங் கணமுன்றி லின்முனுமுற் றமதாம்
பாதியா ரோகணஞ்சோ பானந்தாழ் வாரம்
  படியுமாங் கலனிருக்கை பண்டசா லையதாம்
காதுசுவர் பித்திகைபல் கணி குறுங்கண் சாலம்
  காலதர் வாதாயனமே சாளரஞ்சா லகமே. 196.

சாலமுயர் சலதாரை யங்கணந்தூம் பாகுஞ்
  சாட்டுக்கா மரஞ்சுல்லி * குமுதமுக்கூட் டாய்தம்
தூலமுத்தா னமுமடுப்பாங் கலன்கள்சுடு பூமி
  சுள்ளையதாந் தக்கசமே சதுர்க்கையதாஞ் சந்து
மூலைமுக்குச் சந்தியின்பேர் கோணமுடுக் காகு
  முச்சந்தி யந்திசிருங் காடகநாற் சந்தி
கோலியிடு சுருங்கைகன்ன வாசலின்பேர் புகலே
  குதிரின்பேர் பாடிபா சறையுமுனைப் பதியே. 197.

பதியுறையூர் கோழியதாங் கஞ்சிகச்சி காஞ்சிப்
  பதியாகுங் காளகங்க டாரமாங் கூடல்
மதுரையாங் காவிரிப்பூம் பட்டினம்பு காராம்
  வஞ்சிகரு வூர்வேணு வனநெல்லை யாகு
மிதுலைவிதே கைப்பெயராங் கோசலைசா கேதம்
  விநிதையயோத் தியின்பேரா மவந்தியுஞ்சை யாகு
நதியினவி முத்தம்வா ரணவாசி வார
  ணசிகா சிப்பெயர்சிங் களமீழ நகரே. 198.

நகர்க்கூலம் பீடிகையங் காடியாவ ணமா
  நவின்றநெடுந் தெருமன்ற மார்க்கநிய மமுமாம்
* வகுத்தகுறுந் தெருமறுகாம் பக்கணஞ்சி ரேணி
  வாடைபூ ரியஞ்சேடி தெருவெள்ளல் வீதி
புகுத்தவா பீனம்வே சனமாகும் பத்தும்
  பொதுவீதிப் பேர்செண்டு வையாளி வெளியே
யகற்றுதிரு முற்றமிவை புரவிவட்ட நான்கா
  மடருந்தாள் பூழிபொடி புழுதியின் பேர்த் தரமே. 199.

தரணிகுன்று குவடுவரை பதலைநகஞ் சயிலந்
  தாணுமா திரம்விலங்கல் விண்டுசையஞ் சிமைய
மிரவிபொருப் படுக்கல்பூ தரஞ்சாரல் பொச்சை
  யிறும்புகுறும் பொறைகிரி சுரும்புபொகுட் டசல
மரிசிகரம் பிறங்கல்வெற்புச் சிகரிசிலை நாக
  மத்திரித ராதரஞ்சி லோச்சயம்வே தண்டங்
கிரிதடங்குத் தரம்பொங்கர் மந்தரங்கற் பறம்பு
  கேளிதங்கல் லகநவிரங் கனதரமோ திமமே. 200.

ஓதிபருப் பதம்வீரஞ் சிலம்புபொறை விசைய
  *மோங்கல்பொற்றை கோத்திரிசி ராவணமே பீலி
பாதவமென் றறுபதுமே மலையின்பே ரறையே
  பாறையின்பேர் கோடுகொடு முடிகூடஞ் சிகர
மீதுயர்ந்த குவடைந்து மலையி னுச்சிப் பேராம்
  விவரமுழை முடுக்கர்விடர் கந்தரமே நிகுஞ்சம்
பேதமுழைஞ் சிலுங்குகைப்பே ரறையின்பேர் *முழைஞ்சு
  பிலமுமா மதன்வாச னூழைசுருங் கையுமே. 201.

சுருங்குதடஞ் சாரல்வா ரஞ்சானு நிதம்பஞ்
  சொன்னமலைப் பக்கமதாங் கற்பாழி பொறையே
கரண்டைதுறு கல்லாகும் வலஞ்சிலைகல் லுபலங்
  கனசிரா வணஞ்சைய முலந்திரண்ட கல்லா
முரம்புபரல் பருக்கையதாங் குவைதிடறு திட்டை
  மோடுசுவல் மேடுகுப்பை திடர்படரே வன்பால்
விரிந்தகுவா லவலொதுங்கல் பதுக்கையுமேட் டின்பேர்
  விடர்விட்பு கமர்மூன்று நிலம்பிளந்த வடுவே. 202.

வடமலைவின் மலைதேவா லயந்துருவா ரூட
  மந்தரமுத் தரகிரிபொன் மலைமத்து மலையே
நெடுமலையு மேருவின்பேர் வெள்ளிமலை கயிலை
  நீண்டசயி லாதிவிசை யாத்தம்வே தண்டங்
கடதவள கிரியிரச தாசலஞ்சி வாத்திரி
  கயிலாச கிரிப்பேர்தென் மலைபொதிகை மலைய
மடர்பொதிசந் தனகிரிதாம் பிரபேதி தமிழ்வெற்
  பகத்தியா சலந்தென்றற் கிரிபொதிய மலையே. 203.

* புதவுசுவப் (பி-ம்)
* முதிர் (பி-ம்)
† மேற்கோ (பி-ம்)
* டுசிதமுறு (பி-ம்)
§ ராதரங்கோ (பி-ம்)
* திரந்தறைபூ (பி-ம்)
* பதின்மூன்றாகும் (பி-ம்)
† பானமுட்டம் (பி-ம்)
* சேர்புவாழ் (பி-ம்)

† தழிவேதி (பி-ம்)
* வேங்கைசுற்று (பி-ம்)
* பகவுடுப்பாம் (பி-ம்)
* படிசுருக்கு (பி-ம்)
* விளவிவீட் (பி-ம்)
* முக்கூட்டுக் குமுதம் (பி-ம்)

* வகிர்த்த (பி-ம்)

* மோங்கல்பொறை (பி-ம்)
* முரஞ்சு (பி-ம்)

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[656-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 4 களம் 3.

ப்ரூட்டஸ்:—நீ ஏசறவுகொள்ளற்குரிய தொன்றை முன்னரே செய்திருக்கின்றனை. (1) நீ யுறுத்தும் பயங்களில், காஸ்வியஸ், அஞ்சுவதற்கொன்று மில்லை. வாய்மையின் வலிய படைக்கலம்தாங்கியிருக்கின்றேனாதலின், வீணையுலவும் காற்றைப்போல் என்னைக் கடந்துசெல்கின்ற அவைகளை யான் மதிக்கின்றே னல்லேன். (2) பொன் சில வேண்டி நான் உன்பா லனுப்பினேன்; நீ மறுத்துவிட்டாய்-தீநெறியிற் பொருள்செய்ய நானோ ஒன்றுங் கூடியவ னல்லன். தெய்வசாக்ஷியாக யான், உழவர்தம் வன்கரங்களினின்று அவர் அற்பப் பொருளைத் தகாநெறியிற் பறிப்பதனினும் என் இதயத்தையே நாணயச்சாலையாக்கி என் இரத்தத்தைப் பணமாகச்சொரிந்திடுவேன்(3). என் சைனியத்திற்குச் சம்பளம் கொடுப்பதற்காக உன்பால் பணம் பெற்றுவரும்படி ஆளனுப்பினேன்; அதனை நீ எனக்குக் கொடுக்காமல் மறுத்துவிட்டாய்: காஸ்வியஸிற்கு ஏற்றவொரு காரியமோ அது! மற்று, கேயஸ் காஸ்வியஸிற்கு நான் அவ்வண்ணம் எதிர் மாற்றந் தந்திருப்பேனோ! (4). தன் நண்பர்க்குக் காட்டாமல், இவ்வளவு துரோகமுடைய காசுகளைப் பூட்டிக்கொள்வதோர் பேராசையுடையவனுப் மார்க்கஸ் ப்ரூட்டஸ் ஆகுங்கால், தெய்வங்காள், உங்கள் இடியேறுகளையெல்லாம் ஆயத்தமாய்

(1) "எனக்கு உன்பால் இருக்கும் அன்பினில் நீ அளவு கடந்த நம்பிக்கை வைத்திருப்பதாற்றான், என்னை இப்படி நிந்தித்துக் கோபமூட்டத் துணிகின்றாய். ஆயினும், என்பொறுமையும் தளர்ந்து நானுன்னைக் கொன்றுவிட நேரிடும் என்பதை மறவாதே, பிறகு, "ஐயோ பொறுமையிழந்து உன்னைக் கொன்றேனே, என்று நான் மனம் வருந்த நேரலாமாயினும் நீ இழந்த உயிரைப் பெறமாட்டாய். ஆகையால், என்னை இன்னமும் அவமதித்துக் கோபமூட்டாதே" என்று சொன்ன காஸ்வியஸ்ஸைப் பின்னும் அவமதித்து, "சீ, போ! இனித்தான் நாணி வருந்துதற்குரிய ஒன்றைச் செய்வதற்கிருப்பவன்போல் பேசுகின்றாயே. இலஞ்சங்கள் வாங்கியதற்கு நீ இப்பொழுது வருந்தவேண்டியவனா யிருக்கின்றாய் என்பதை என் மறக்கின்றனை" என்று ப்ரூட்டஸ் மீண்டும் இடித்துரைக்கின்றான்.

(2) அவைகளை—நீ உறுத்தும் பயங்களை.

(6) உன்னைப்போல் தகாதபடி யெல்லாம் பொருள் ஈட்டப்பார்ப்பதைக் காட்டிலும் நான் மார்பைப் பிளந்து கொண்டு சாவேன்—என்பது பொருள்.

(4) நீ கேட்டால் நான் மறுத்திருக்கமாட்டேன்—என்பது பொருள்.

(5) ப்ரூட்டஸ் தன்னையே இவ்வண்ணம் படர்க்கையில் பேசிக்கொள்கின்றான். "நானிவ்வாறு உனக்குப் பணங் கொடுத்துதவாமற் போவேனாயின், என் தலையில் இடி விழட்டும்"—என்பது பொருள்.

வைத்திருந்து அவனைச் சின்னபின்னமாய்ச் சிதைத் தெறியுங்கள் (5).

காஸ்ஸியஸ்:—நானுனக்கு மறக்கவில்லையே.

ப்ரூட்டஸ்:—மறக்கத்தான் மறத்தாய் நீ.

காஸ்ஸியஸ்:—நான் மறக்கவேயில்லை; என் மறுமொழியை உனக்குக் கொணர்ந்தவன் முழுமூடனே.—ப்ரூட்டஸ் என் மார்பினைப் பிளந்துவிட்டனன் (6) நண்பனொருவன் தன் நண்பனது தவறுகளைப் பொறுத்தல் வேண்டும். மற்று, நீயோ, ப்ரூட்டஸ், இருப்பதனினு மதிகமே என்னுடையவைகளை ஆக்குகின்றாய் (7).

ப்ரூட்டஸ்:—அவைகளை நீ என்மீது பயில்கின்றவரையில் நானது செய்கின்றேன் அல்லேன் (8)

காஸ்ஸியஸ்:—நீ யென்னை நேசிக்கின்றாயல்லை (9).

ப்ரூட்டஸ்:—உன் குற்றங்களை நான் விரும்புகின்றேனல்லேன் (10).

காஸ்ஸியஸ்:—நேயமுடைய கண்கள் அத்தகைய குற்றங்களை ஒருபோதும் காண இயலாது (11).

ப்ரூட்டஸ்:—உயரிய ஒலிம்பஸ் மலையெனப் பெரியதாய்த் தோன்றினும் இச்சகன் கண்களே அவைகளைக் காண்கிலாதன (12).

காஸ்ஸியஸ்:—வருக ஆண்டனி, இள ஆக்டேவியஸ் நீயும் வருக, காஸ்ஸியஸ்ஸின் மீதே உங்கள் பழியைத் தீர்த்துக்கொள்ளுங்கள்; ஏனெனில், காஸ்ஸியஸ் இவ்வுலகத்தைச் சலித்திருக்கிறான்: அவன் அன்புவைத்த வொருவனாற் பகைக்கலாகவும், தன் மைத்துனனால் அவமதித் தெதிர்க்கத் துணியலாகவும், அவன் குற்றங்களெல்லாம் உற்றுநோக்கி, குறிப்புப்புத்தகத்தில் பொறித்துவைத்து, கற்று, பின் என் முகத்திலே விட்டெறிய மனப்பாடம் செய்யலாகவும்(13)......ஐயகோ! கண்ணின் றழுது தீர்க்குமொரு வீரந்தான் வல்லவனாயிருக்கின்றேன். (14).—இதோ என் கத்தி, இதோ என் வெறும் மார்பு; அதனுள், பொன்னிலும், விலை யுயர்ந்து தனதன் நிதியிலும் அரியவோர் இதயம் இருக்கின்றது. நீ ஒரு உரோமனா யிருப்பதாயின் அதனை இன்றே எடுத்துக்கொள் (15). நிலக்குப் பொன்னினை மறுத்த யான் என் னிதயத்தை ஈகின்றேன். ஸீஸரை நீ குத்தியது போன்றே என்னையும் குத்திவிடு. ஏனெனில், நீ யவனை மிகுதியும் பகைத்தபோதும், காஸ்ஸியஸை நீ எக்காலும் நேசித்ததைக் காட்டிலும், அதிகம் நேசித்திருந்தனை என்பதறிவேன் (16).

ப்ரூட்டஸ்:—உன் வாளினை வள்ளுறையில் சேர்த்துவிடு. வெஞ்சினங் கொள்வதற்கு நீ வேறு வேளை தேடிக் கொள். அப்பொழு ததற்கு இடம் கிடைக்கும் (17). நீ, என்செயினும் செய்க; கோபத்திற்காளாகியே செய்கின்றாய் என்பதன்றிக் கருத்தைவைத் தென்னை அவமதிக்கின்றாய் என்று கொள்ளேன். ஓ, காஸ்ஸியஸ், கோபத்தைச் சுமக்குந் தன்மையில் சிக்கிமுக்கிக்கல்லையனைய வொரு பசுவுடன் பிணைக்கப்பட் டிருக்கின்றாய் நீ (18). அக்கல், மிகவும் வலிந்து தூண்டினால் விரைந்தோர் பொறிகாட்டி மீண்டு முடனே குளிர்ந்துவிடுகின்றது.

காஸ்ஸியஸ்:—துயரமும் சினத்தொடு கதிக்கும் இரத்தமும் துன்புறுத்தி அலைக்கழிக்குங்கால், தன் ப்ரூட்டஸிற்குக் களிப்பும் சிரிப்பும் ஆவதற்கோ காஸ்ஸியஸ் வாழ்ந்திருந்தான் (19).

ப்ரூட்டஸ்:—நானதனைப் பேசியபோது, நானுந்தான் சினத்தொடு கதித்திருந்தேன் (20).

காஸ்ஸியஸ்:—அவ்வளவேனும் ஒவ்வுகின்றாயோ? உன் கரத்தினை அளித்திடு (21).

ப்ரூட்டஸ்:—என் இதயத்தையும் அளிக்கின்றேன்.

காஸ்டிஸியஸ்:—ஓ! ப்ரூட்டஸ்

ப்ரூட்டஸ்:—என்ன விது? [உள்ளே ஒலிகேட்கின்றது.]

(6) இது, இடையிலே காஸ்ஸியஸ் தனக்குள் சொல்லிக் கொண்டது.

(7) நண்பன்பால் பிழைகண்டவிடத்தும் அதனைப் பொறுத்துக்கொள்ளல் நட்பிற்கழகாகும். நீயோ என் தவறுகளைப் பொறுக்காதது மன்றி, இருப்பதனினும் அதிகமாகப் பாராட்டுகின்றாயே—என்பது பொருள்.

(8) நீ எனக்கே பிழையிழைக்கப் புகுகின்றவரையில் நான் உன் குற்றங்களைப் பெரிதாக ஒன்றும் பாராட்டாமல் விட்டிருந்தேன், இனிச்சும்மா விரேன்—என்பதுபொருள்.

(9) & (10) "என்பால் உனக்கு நேயமென்பதிருக்குமாயின் இப்படிஎன்னை நீ ஏசமாட்டாய்" என்றான் காஸ்ஸியஸ். அதற்குப் புரூட்டஸ், "உன்னை நேசிக்கின்றேனே அல்லேனோ அது வேறுவிடயம். உன் குற்றங்களைக் குணங்களாகக் கொண்டாடி உன்னை யான் உவக்கமாட்டேன்" என வெறுத்து மொழிகின்றான்.

(11) என்பால் உனக்கு நேயம் உண்டாயின் என் குற்றங்களைக் கண்டிருக்க மாட்டாய். அஃதின்மையால் என்பால் சில குற்றங்கள் உன் கண்களுக்குத் தென்படுகின்றனபோலும்—என்பது பொருள்.

(12) இச்சகன்=முகஸ்துதி செய்பவன். அவைகளை அக்குற்றங்களை. "இச்சகம் பேசி நானுன்னை உவப்பித்து வாழவேண்டியவனா யிருந்தாலன்றோ, உன் குற்றங்களைக் காணாமல் நானென் கண்களை மூடிக்கொள்ளவேண்டும்" என்பது பொருள்.

(13) இப்படியெல்லாம் நேர்ந்தபின் நானினி உயிர் வாழ்வானேன். ஆண்டனியே, ஆக்டேவியஸ்ஸே, இப்பொழுது வந்தென்னைக் கொன்று உங்கள் பகையை முடித்துக்கொள்ளுங்கள் ; நானு மிவ்வுலகத்தை வெறுத்துக் கிடக்கின்றேன்.

தன்னைப் படர்க்கையில் வைத்துப்பேசிவந்த வாக்கியம் பிறகு அவனை அறியாமலே தன்மையில் மாறுவது காஸ்ஸியஸின் மனம் கலங்கியிருந்ததால் நேர்ந்தவோர் குழப்பம்.

(14) இந்நிலையில் என்னுயிரைப் போக்கிக்கொள்ளத் தைரியம் இல்லாமல் வீணே அழுதுகொண்டிருக்கின்றேனே—என்பது பொருள்.

(15) தனதன் - குபேரன்; இவனுக்கு நேரான கிரேக்கர் தெய்வம் Pluto மூதனூலில் உரைக்கப்பட்டிருக்கின்றது.

(16) ஸீஸரை நீ கொன்றாயாயினும் என்னிலும் நீ அவனை எப்பொழுதும் நேசித்திருந்தனை. ஆதலின் அவனைக் குத்தியதுபோலவே, என்னையும் குத்திவிடு—என்பது பொருள்.

(17) என்னெதிரே உன் கோபத்தைக் காட்டுவதிற் பயனில்லை. வேறெவருடனேனும் கோபங்கொள்வாயாயின், அது செல்லலாம். அவனும் உன்னைக்கோபித்து எதிர்க்கலாம். நானோ அது செய்யேன்-என்பது பொருள்.

(18) சாந்தகுணத்தில் தன்னை யோர் பசுவிற்கு நிகராக ப்ரூட்டஸ் கூறிக்கொள்கின்றான். பசுவிற்குக் கோபம் வராது. வந்ததாயினும் சிக்கிமுக்கிக் கல்லில் தீப்பொறி தோன்றுவதுபோல் வெகு விரைவில் மறைந்துவிடும், என்று இவ்வுவமையை அடுத்த வாக்கியத்தில் விரித்துரைக்கின்றான்.

(19) நானிப்படி வருத்தமும் வஞ்சினமுங்கொண்டு உழலும்போது என்னை மதியாமல் நீ பரிகசம் செய்து சிரித்து நடத்தும்படி ஆயிற்றே—என்பது பொருள்.

(20) இனியும் காஸ்ஸியஸ்ஸைக் கோபமூட்டுவது தக்கதன்றெனவுணர்ந்த ப்ரூட்டஸ், மெல்ல, சமாதானம் செய்யத் தலைப்படுகின்றான். நானுன்னைப் பரிகசித்தும் அவமதித்தும் பேசியபோது, வெளிக்குத் தோன்றவில்லையாயினும், உண்மையில் நானுந்தான் கோபத்தால் மதிமறந்து இருந்தேன்—இல்லையேல் அவ்வாறு செய்திருக்கமாட்டேன்—என்பது கருத்து.

(21) எனின், உன் நட்பினை யான் இழக்கவில்லை என்பதற் கடையாளமாக உன் கையை யான்பற்றக் கொடு—என்பது பொருள்.

முருகன் போற்றி மாலை

[587-வது பக்கத் தொடர்ச்சி]

மன்றல்கெ ளமுத சீத
மந்தாரத்தெழுந்தோர் தம்மை
அன்றரன் படையா லட்ட
அரகர முருகா போற்றி. 45.

பொருதிறல் வீரர் தம்மைப்
பூதரை வாரிப் புக்க
திருநெடுந் தேரை வாங்கும்
சிவசிவ முருகா போற்றி. 46.

சக்கரப் புள்ளாய் வந்த
தாவிலாச் சூரன் மாயம்
அக்கண மழித்த வீரா
அரகர முருகா போற்றி. 47.

ஐவகைப் பூத மாகி
யவுணர்கோனுடல் வெம்போர்
செய்வகை குறித்து நீக்கும்
சிவசிவ முருகா போற்றி. 48.

மருட்பெரு வடிவங் காட்டி
வலியபோர் செய்தோன் காண
அருட்பெரு வடிவங் காட்டும்
அரகர முருகா போற்றி. 49.

காய்சின மாறி நின்று
கண்டுளங் களித்த சூரன்
தீநெயி னுருகச் செய்த
சிவசிவ முருகா போற்றி. 50

நன்னல வடிவங் கண்டு
நைந்தன னிற்குங் காலை
அன்னவ னறிவை மாற்று
மரகர முருகா போற்றி. 51.

மேவல னிருள்போற் றாக்க
மிகப்பயந் தோல மிட்ட
தேவர்க ளச்சந் தீர்த்த
சிவசிவ முருகா போற்றி. 52.

மாக்கட ணடுவ ணாக
மாவுருக் கொண்ட சூரன்
ஆக்கையை யயிலாற் கீறு
மரகர முருகா போற்றி. 53.

உருகெழு மிரண்டு கூறும்
பறவையா யுருத்துச் செல்லத்
தெருள்கெழு வருளி னேக்கும்
சிவசிவ முருகா போற்றி. 54.

வடிவறு மயிலைக் கூவி
மறைமுடி யறித றேற்று
அடியிணை தாங்கு கென்ற
அரகா முருகா போற்றி. 55.

மாவலங் கொண்ட முட்டாள்
வான்சிறைச் சூட்டு மோட்டுச்
சேவலைக் கொடியாய்க் கொண்ட
சிவசிவ முருகா போற்றி. 56.

வாரணத் தரியும் செங்கை
வாரணத் தரியுங் கஞ்சத்
தாரணத் தயனும் போற்றும்
அரகர முருகா போற்றி. 57.

மேவரு விபுத ரோடு
வெஞ்சிறை யிருந்து நொந்த
தேவர்கோன் மகனை மீட்ட
சிவசிவ முருகா போற்றி. 58.

சீரலை வாயின் மேலைத்
திசைமுகன் வானோர் போற்ற
ஆரருள் சுரந் திருந்த
அரகர முருகா போற்றி 59.

கருப்பரங் கடிய நோற்ற
கலைமுனி சிறவர்க் கோதித்
திருப்பரங் குன்று போந்த
சிவசிவ முருகா போற்றி 60.

கற்பக நாட னீன்ற
கற்பகப் பிடிய னாளை
அற்பகங் குளிர வேட்ட
அரகர முருகா போற்றி. 61.

மூவர்தம் பதியி லேற
முனிவர்தம் மகிழ்வி னேறத்
தேவர்வின் குடியி லேற்றுஞ்
சிவசிவ முருகா போற்றி. 62.

செம்மையா யுயிர்கள் வாழச்
சேணுயர் கந்த வெற்பில்
அம்மையோ டினிது வாழு
மாகா முருகா போற்றி 63.

அல்லல்தீர் விரதம் நோற்ற
வரசனுக் கரசி னோடு
செல்வமுஞ் சிறப்பு மீந்த
சிவசிவ முருகா போற்றி. 64.

வீரரை வீரர் கோனை
வேந்தற்குத் துணைவ ராக
ஆருருண் முறையிற் றாண்டும்
அரகா முருகா போற்றி 65.

வெள்ளிநாள் விரதந் தன்னை
விதிமுறை நோற்ற பேர்க்குத்
தெள்ளிய செல்வ மீயும்
சிவசிவ முருகா போற்றி. 66.

உளமுற வாண்டு முந்நான்
கோதுகார்த் திகைநா ணேற்றூர்க்
களவிலாப் பேறு நல்கு
மரகர முருகா போற்றி. 67.

அருந்துலை மதிமுற் பக்க
மாறுநாள் கோற்ற போர்க்குத்
திருந்திய வரங்க ளீயும்
சிவசிவ முருகா போற்றி. 68.

மான்றர வளர்ந்த வள்ளி
மணநல முனிவன் கூற
ஆன்றபே ரருளிற் போந்த
அரகர முருகா போற்றி. 69.

பூந்தினைப் புனத்தைப் போற்றும்
பூங்கொடி புடைபோய்ப் பூவாய்ச்
சேர்ந்தெனை மணப்பா யென்ற
சிவசிவ முருகா போற்றி 70.

வீங்குதோ ளெயினர் சூழ
வெற்பினுக் கரையன் மேவ
ஆங்கொரு வேங்கை யான
அரகர முருகா போற்றி 71.

மையலுற் றிரங்கி ஞான
வரம்புணர் விருத்த சைவத்
தெய்வத வேடங் கொண்ட
சிவசிவ முருகா போற்றி 72.

மலர்வனம்

வாழியநின் போய் வீழ்கை.

அன்புகெழுமிய பொன்னனையாளொரு செல்வத் தலைமகள் தன் காதலன் என்புருக அணைக்குமாறு புரிந்ததோர் அருஞ்செயற் சூழ்ச்சியை அவளே தன் தோழிக்கு உரைக்கின்ற வாய்மையைக் கலித்தொகை யுட்கேட்க நண்பர்காள் வம்மின்—

கயமல ருண்கண்ணாய் காணா யொருவன்
வயமா னடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்
பாயல் பெறேனன் படர்கூர்ந் தவன்வயிற்
சேயேன்மன் யானுந் துயருழப்பே னாயிடைக்
கண்ணின்று கூறுத லாற்றா னவனாயிற்
பெண்ணன் றுரைத்த னமக்காயி னின்னதூஉங்
காணான் கழிதலு முண்டென் றொருநாளென்
னோணெகிழ் புற்ற துயாராற் றுணிதந்தோர்
நாணின்மை செய்தே னறுநுதாலேன
லினக்கிளி யாங்கடிந் தோம்பும் புனத்தய
லூசலூர்ந் தாட வொருஞான்று வந்தானை
யைய சிறிதென்னை யூக்கி யெனக்கூறத்
தையா னன்றென் றவனூக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தே னவன்மார்பின் வாயாச்செத்
தொய்யென வாங்கேயெடுத்தனன் கொண்டான்மேன்
மெய்யறியா தேன்போற் கிடந்தேன்மன் னாயிடை
மெய்யறிந் தேற்றெழுவே னாயின்மற் றொய்யென
வொண்குழாய் செல்கெனக் கூறி விடும்பண்பி
னின்க ளுடைய னவன்.

[குளத்தில் பூக்கின்ற நீல மலர் போன்ற மையுண்ட கண்களை உடைய என் தோழியே, கேள்—வலிமை வாய்ந்த யானை முதலிய விலங்குகளின் அடிச்சுவடைத் தேடுவான் போல், கட்டுவதற்குரிய கண்ணியையும் வில்லையும் உடையவனாய் வருவதும், வந்து என்னைப் பார்த்துத் தான் அடைந்த காதல்நோயைக் குறிப்பாலே நான் உணரக் காட்டுவதன்றி வாயால் உரைக்கலாற்றனாய்ப் போவதுமாகிப் பல நாள் கழித்தான். அது கண்டு, அவனிடத்து அதிகம் உறவில்லாத நானும், அவன் என்செய்கின்றானென்னும் நினைவு மிக்குத் துயில் பெறேனாய் வருத்தத்திலே விழுந்து அழுந்துவேன். அவனோ வெனின் தன் குறையை என் முன் உரைக்காமல் நாடோறுங் கழிகின்றான்; 'நானோ எனின், நின் வருத்தத்திற்கு நானும் வருந்தினேன்' என்று கூறுவது பெண் தன்மையன்று. இப்படியிருக்க, இந்நிலையின் உண்மையை ஆராயாமல் இறந்து விடுவானோ என்றஞ்சி இடையிலே ஒருநாள் என் தோள்கள் மெலிந்து, துணியத்தகாத தொன்றைத் துணிந்து நாணமில்லாத காரியத்தைச் செய்துவிட்டேன். அது யாதெனில், நறிய நுதலையுடையவளே கேள்,-தினைப்புனத்தில் கிளிக்கூட்டம் இறங்காமல் யான் காத்திருந்த இடத்திற் கயலில் இட்டவொரு ஊஞ்சலில் நான்ஏறி ஆடிக்கொண் டிருந்தபோது ஒருநாள் அவன் அங்குவர, "ஐயனே, சிறிதுபொழுது என்னை ஊஞ்சலாட்டுவாயாக" என்று சொல்ல அவனும் அதற்கு உடன்பட்டு, "பெண்ணே நீ கூறியது நன்று" என்று ஊசலாட்டவும், நான் கைநெகிழ்ந்து வீழ்ந்தேனென்று அவன் கருதும்படி பொய்யாக அவன் மார்பின் கண் வீழ்ந்தேன். அதனை அவன் உண்மையாக எண்ணி அப்பொழுதே என்னை விரைய எடுத்து அணைத்துக் கொண்டான். யான் மயக்கம் நீங்கி எழுந்திருப்பேனாயின், பின் பிறரறிந்து என்னைப் பழிப்பார் என்ற கண்ணோட்டத்தாலே, "ஒண்குழாய் நீ போ" என்று போக்கிவிடுங் குணத்தினன் ஆதலின், மெய்ம்மறந்தவள்போலவே நான் நெடுநேரங் கிடந்தேன்—பார்].

மடக்கொடி நல்லாள், கண்ணோட்டமுடைய காதலன்றன் இதயத்தினகத்தேபோல் புறத்தும் இனி வருங் காலமெல்லாம் நனிவளர்க.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்



டானிக்குகள் :
ச்யாவனப்ராச
ஜீவலாபதா
பாதாமி லேகியம்
தந்வந்தரி லேகியம்

தைலங்கள் :
அமிர்தாமலக
பிருங்காமலக
லாக்ஷகுமார
ஹிமஸாகர

"பாலலாபதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர் கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)

ச்யாவனப்ராச பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மெடிகேடட்-டப்பி
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.
நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.
விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.
சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.
முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்.
மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)
சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா 0-12-0

களவியற் காரிகை.
ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.
1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.
ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா
திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,
விலை அணா 0-6-0

கலாநிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA
MUDALIAR C. RASANAYAGAM C.C.S.
An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.
PRICE Rs. 5-8-0.
KALANILAYAM
PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1-4-0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்திபா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:— அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**

காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டுகளுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

அனுதாபம்

சென்னையில் மவுண்ரோடில் கடந்த ஒன்பது ஆண்டுகளாகச் சிறந்த முறையில் நடந்து வரும் பி. என். பிரஸ் என்னும் பெயருடைய அச்சுக்கூட முதலாளியான ஸ்ரீமான் C. நடேச முதலியாரவர்கள் செப்டம்பர் மாதம் 5-ந்தேதி யன்று மாரடைப்பு நோயால் எதிர்பாராதபடி காலமான செய்தியை அறிய மிகவும் துயருறுகின்றோம். இவர் நேர்மையான வாழ்க்கை யுடையவர். வயதின் முதுமையுறாத ஸ்ரீமான் முதலியாரவர்கள் இவ்வுலகை நீத்துச் சிவபதமெய்த நேர்ந்ததால், வருந்தும் அன்னாரது மனைவி மக்கட்கும், மற்றைய சுற்றத்தார்க்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறக்குமதி வரி:—அயல்நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வரும் ஜவுளிகளின்மீது விதிக்கப்பட்டிருக்கும் காப்புவரியை உயர்த்தும் விஷயமான யோசனை இருந்துவருகின்றது. அதுபற்றி ஜப்பான் அரசாங்கம், அயல்நாட்டு ஜவுளிகளின்மேல் விதிக்கப்படும் காப்புவரி இனியும் உயர்த்தப்படுமேல் ஜப்பான் வியாபாரத்திற்கு விரோதமான வரியாகுமென்றும், அப்படி உயர்த்துவது இந்தோ ஜப்பான் வியாபார ஒப்பந்தத்திற்கு விரோதமானதென்றும் ஒரு கண்டனத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனுப்பத் தீர்மானித்துளதுஎன்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

வேலை நிறுத்தம்:-லங்காஷையர் நெசவுச் சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களில் 2 லட்சம் பேர் வேலைநிறுத்தம் செய்துளார்கள் என்று தெரிகின்றது. சம்பளக் குறைவையும், இதற்கு முன்னர் வேலைநிறுத்தம் நடந்ததில் சிலரை வேலையினின்று தள்ளியதையும் தொழிலாளர்கள் விரும்பவில்லை. இந்த வேலைநிறுத்தம் விஷயமாய்ச் சமரஸ ஏற்பாட்டிற்கு முதலாளிகள் முன்வரவில்லை என்று தெரிகின்றது. தெற்கு லங்காஷையரில் இன்னும் சில ஆலைகளில் வேலை நடந்து வருகின்றனவாம்.

***

பிரிட்டிஷ் பார்லிமெண்டு அங்கத்தினர்:—பிரிட்டிஷ் பார்லிமெண்டு அங்கத்தினரும் கன்ஸர்வெட்டிவ் கட்சியைச் சேர்ந்தவருமான மிஸ்டர் K. H. ஹேல் என்பவர் இப்பொழுது பெங்களூரில் தங்கியிருக்கின்றார். அவர் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—

"இந்திய அரசியல் திருத்தவிஷயமாய் ஏற்பட்டிருக்கும் நிலையை உள்ளபடி தெரிந்துகொண்டு ஒரு சமரஸ முயற்சி செய்யவேண்டுமென்னும் நோக்கத்துடன் நான் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்கின்றேன். இந்தியாவின் எண்ணம் சீர்திருத்த விஷயமாய் உறுதியுற்றுளது என்பதை எனது சுற்றுப்பிரயாணத்தால் அறியலானேன். இந்தியாவும் பிரிட்டனும் ஒன்றையொன்று சரியே அறிந்துகொள்ளவில்லை. அதனாற்றான் சந்தேகமும் அவநம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. அரசியல் நெருக்கடியும் அதனால் விளைந்த கஷ்டமும் இவ் வவநம்பிக்கையாற்றான் ஏற்பட்டுள்ளன. தற்காலம் அதிகாரத்திலிருக்கும் கன்ஸர்வேட்டிவ் கட்சியாரிடமிருந்து எந்த முற்போக்கான முறையையும் இந்தியாபெற முடியாதுஎன்று இந்தியர் எண்ணுவது தவறு.

"இந்தியாவில் ஏற்பட்டுள்ள வகுப்புப் பிணக்கு இந்திய அரசியல் முன்னேற்றத்திற்குரியது அன்று. இந்தியர் தேசீய மனப்பான்மையை வளர்த்து வகுப்பு நினைவை அகற்றவேண்டும். அப்பொழுதுதான் இந்தியா பெருமையடைய முடியும். இந்தியாவில் நடக்கும் சுதேசிய இயக்கத்தை நான் ஆதரிக்கின்றேன். இந்தியாவில் கிடைக்கக்கூடாத பொருள்களைத்தான் பிரிட்டனிலிருந்து வாங்கவேண்டும். ஜப்பான் ஜவுளி வியாபாரம் இந்தியாவின் வியாபாரவளர்ச்சிக்கு இடையூறேயாகும். எனவே காப்பு வரி அவசியமே.

"ஒட்டாவாவில் இந்தியாவிற்கும் பிரிட்டனுக்கும் நடக்கும் வியாபார சம்பந்தமாய்ச் செய்யப்பட்ட ஒப்பந்தம் நல்லெண்ணத்தைக்காட்டும் ஒப்பந்தமே. இந்தியர் அந்த ஒப்பந்தத்தால் தமக்கு விளையவிருக்கும் நன்மையைப் பூர்ணமாக அறியவில்லை என்று தெரிகின்றது. இந்த ஒப்பந்தம் இந்தியரையும் பிரிட்டிஷாரையும் வியாபார நட்பால் இணைத்துவைக்கும் தன்மையது. இங்கிலையில் பகிஷ்காரம் முதலிய செயல்களால் நட்பின் வளர்ச்சி தடைபுறுமாறு இந்தியர் செய்தலாகாது.

***

சமாதானப்படை:-இங்கிலாந்தில் சிலபாதிரிமார்கள் ஒன்றுகூடி, யுத்தம் நடவாமற் செய்வதற்கு ஒரு சமாதானப்படையைத் திரட்டிவருகின்றனர். எங்கெங்கு யுத்தம் நடக்கின்றதோ அங்கு இப்படை சென்று நிராயுதர்களாய்ச் சத்யாக்கிரஹம் செய்யும். இந்தப் படை இப்பொழுது சீனஜப்பான் யுத்தத்தை நிறுத்த முயலும். இப்படையில் இந்தியரும் சேர்ந்துகொள்ள நினைத்துளர், என்று இங்கிலாந்துச் செய்தி கூறுகின்றது.

***

இந்தியாவின் பழமை ஆராய்ச்சி:—வங்காள வாசியும் 47 வயது சென்றவருமான பாபு லலிதமோஹன் கங்குலி என்பவர் 1927-வது வருடம் கால்நடையாக இந்தியா முழுவதிலுமுள்ள சிற்பம் நாகரிகம் முதலிய சிறப்புகள் வாய்ந்த பாகங்களைக் காணவேண்டிப் பிரயாணமானாராம். அவர் நேப்பாளம், பூட்டான், காஷ்மீரம், ஐக்கியமாகாணம், மத்தியமாகாணம், குஜாரத் கத்தியவார், காராச்சி, ஆமதாபாத், பம்பாய், பூனா, கோலாப்பூர், ஷோலாப்பூர், பத்ராவதி முதலிய விடங்களைப் பார்வையிட்டுள்ளாராம். அவர் இது வரையில் 10295 மைல்கள் நடந்துள்ளார் என்றும் இனி தென்னிந்தியாவில் இராமேச்சுரம், கன்யாகுமரி வரையிலுள்ள விடங்களைப் பார்வையிட்டுச் சென்னைக்கு வந்து வங்காளம் திரும்புவார் என்றும், மிகுதியான சுற்றுப்பிரயாணத்தை முடிக்க இன்னும் இரண்டு வருடங்கள் ஆகுமென்றும், 1934-வது ஆண்டு இறுதியில் இவர் வங்காளம் போய்ச் சேரலாம் என்றும் கூறப்படுகின்றது. இவரது சுற்றுப் பிரயாண நோக்கம் பண்டை இந்தியா நாகரிகம், ஜனங்களின் பழக்க வழக்கம், முதலியவைகளை ஆராய்தலேயாம். இரயில் பிரயாணம் செய்வதால் ஜனங்களோடு நெருங்கிப்பழக முடியாதாகையால் கால்நடையாகச்செல்கின்றனராம்.

***

பீர்பாண்டு மார்க்கன் என்னும் ஒரு பெரிய தனவந்தர் அமெரிக்காவில் இருக்கின்றனராம். அவர் எப்பொழுதும் வேலை செய்துகொண்டிருப்பது வழக்கமாம். அவரைக் காண ஒரு பத்திரிகை நிருபர் சென்றனராம். அவர் தமக்கு ஒய்வில்லையென்றும், அவசியம் பார்க்க வேண்டுமெனில் 10 பவுன் கொடுத்தால் மூன்று நிமிஷம்பேசலாம் என்றும் கூறினாராம். பத்திரிகை நிருபர் 10 பவுனைக் கொடுத்து அவரிடம் வீண் வம்பு பேசிக்கொண்டிருந்தாராம். அச்செல்வர் "மூன்று நிமிஷங்கள் கடந்தன, 10 பவுன் நஷ்டமடைந்தீர். இனிச்செல்லலாம்'' என்றாராம். அப்பொழுது பத்திரிகை நிருபர் கூறியதாவது:—

'தங்களை எவரும் கண்டு பேசமுடியாது; அப்படிச் செய்பவர்க்கு நான் 100 பவுன் தருவேன் என்று எனது நண்பர் கூறினர். தங்களோடு பேசிவிட்டு வருவதாக அவருக்குச் சொல்லிவந்தேன். பேசியும் விட்டேன். எனக்குப் பத்துப் பவுன் நஷ்டமில்லை. 90 பவுன் இலா[illegible]' என்று சொல்லித் திரு[illegible] பவுனைப் [illegible]

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நே:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலேகளும், கரும்பாலேகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலேகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லேனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளேயுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேஞேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்ளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினுல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்ரேம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லே. கேட்லாக்கிற்கு எழுதவும்.

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலே அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலே அணு 3.

ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.

ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5, மற்ற பர்வம் அச்சில்

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	...	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of ...	...	16.54 %
Claims paid up to end of 1931 over ...	...	Rs. 90,00,000
Invested Funds amount to over		Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)